விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 124 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை (21.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வெளியில் செல்ல முடியாதளவில் நாட்டில் கடும் வெப்பநிலை
### பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

பொதுமக்கள் வெளியில் செல்ல முடியாதளவில் நாட்டில் கடுமையான வெப்பநிலை காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்கள் கடும் வெப்பத்திலிருந்து தங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல்,மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் அதிக வெப்பமான காலநிலை காணப்படுகின்றது.

19

### யாழ்.பல்கலைக்கழகத்தின்
## உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியானார் வேல்நம்பி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாக சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய பீடாதி

19

### பலாலி வீதியில்
## நடத்துநர், சாரதி மீது கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)


யாழ்.பலாலி வீதியில் சேவையில் ஈடுபடும் பேருந்துச் சாரதி மற்றும் நடத்துநரை கத்தியால் குத்திய சம்பவம் நேற்று இடம்

19

# கடன் ஸ்திர நிலையை ஏற்படுத்த ஒத்துழைப்போம்
## பாரிஸ் கிளப் மீண்டும் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

**இலங்கையில் கடன் ஸ்திர நிலையை ஏற்படுத்த தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கப்படும் என பாரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸ் தெரிவித்துள்ளார்.**



நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் பாரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பல்தரப்பு செயற்

### 1800 வைத்தியர்கள்
## நாட்டைவிட்டு வெளியேறினர்

(கொழும்பு)

கடந்த 2 வருடங்களுக்குள் 1,800 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க இந்தவியத்தை

19

## பருத்தித்துறை கற்கோவளத்தில் வெடிபொருட்கள் மீட்பு




(கரணவாய்)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் குறிப்பிட்ட அளவு வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று சனிக்கிழமை அப்பகுதியில் காணி ஒன்றில் கிடங்கு வெட்டிய போது வெடிபொருட்கள் தென்பட்டதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

19

## யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு





## இன்று திறந்து வைக்கப்படும் பெண்கள் சுகநல நிலையம்



### காலத்தின் தேவை - கலாநிதி ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளை, யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் என்பன இணைந்து உருவாக்கியுள்ள பெண்கள் சுகநல நிலையம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளதென சிவபூமி அறக்கட்டளையின் அமைப்பாளர் கலாநிதி ஆறு.

19

### வாகன இறக்குமதிக்கான
## தடையை படிப்படியாக நீக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடையை படிப்படியாக நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென இலங்கை

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாட்கள் தேவை

மல்லாகம் பகுதியில் உள்ள பண்ணையொன்றிற்கு பணியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

(521)

**077 873 8834**

## வேலையாட்கள் தேவை

தச்சுத் தொழிலகம் ஒன்றிற்கு மரம் அரிவுக்கு வேலையாட்கள் தேவை. பாட்டுவாள், றோதவாள் அரிவுக்கு வேலையாட்கள் தேவை. இடம்:கோண்டாவில், யாழ்ப்பாணம்.

(519)

**077 713 0872**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குலம், 42 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கவில்லை.

தொடர்புகளுக்கு :

(523)

**077 905 8615**


## மணமகள் தேவை

32 வயதுடைய MSc UK பட்டதாரி, UK இல் முகாமையாளராக பணிபுரியும் கத்தோலிக்க (R.C) சமயத்தை சார்ந்த 5' 6" உயரமுடைய மணமகனுக்கு தாதி, மருந்தாளர்(அரச உத்தியோகத்தர்) IT பட்டதாரி, வேறு பட்டப் படிப்பு முடித்த 4' 11"- 5' 3" உயரமுடைய அழகிய மணமகள் தேவை. UK இல் வசிப்பவரும் விரும்பத்தக்கது. அங்கிலிக்கன் திருச்சபையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(515)

**076 853 6558**

## பேராசிரியராக முகுந்தன் பதவி உயர்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் முகுந்தன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று (20), சனிக்கிழமை பிற்பகல், துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சயனொளிபவன் முகுந்தனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்று பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் இந்து நாகரிகத்தின் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7,10,33)

## காணி விற்பனைக்கு

யாழ் மின்சார நிலைய வீதிக்கு அண்மையில் பழைய தபால் கந்தோர் வீதியில் 4 1/2 பரப்பு காணியும், யாழ் வைத்தியசாலை வீதியில் மரக்கறி சந்தைக்கு முன்பாக 25 அடி அகலம் 200 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும், 15 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும், யாழ் K.K.S வீதியில் 15 அடி அகலமும் 300 அடி நீளமும் கொண்ட கடையும், யாழ் பிறவுண் வீதியில் 5 பரப்பு காணியும், யாழ் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 2 1/2 பரப்பு காணியும், யாழ் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 5 பரப்பு காணியும், யாழ் வைத்தியசாலைக்கு முன்பாக காந்தி வீதியில் 4 3/4 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

(C-0181)

**0777 23 25 35**

### இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
### SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| ஹாண்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1185~~ | 900 |

விசேட விலைக் கழிவு

(507)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு புதிய செம்மணி வீதி, ஞான வைரவர் கோவில், ஞான ஒளி சனசமூக நிலையம் ஆகியவற்றிற்கு அருகில் 23 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பரப்பின் விலை இரண்டு இலட்சம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(518)

**077 61 53 238**
**077 46 39 303**

## சடலம் மீட்பு

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலிபண்ட் தோட்டத்தில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


75 வயதுடைய பெருமாள் வடிவேல் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வீட்டின் பின்புறத்தில் உள்ள குளியலறையில் தவறான முடிவெடுத்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

## மரண அறிவித்தல்

மலர்வு 12 - 01 - 1931



உதிர்வு 20 - 04 - 2024

### ஐயாத்துரை சிவலட்சுமி (பெற்றி அக்கா)

சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் தற்போது திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிவலட்சுமி 20.04.2024 நேற்று சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தயாநிதி மற்றும் ரதி, சந்திரசேகரம், சத்தியசீலன், காலஞ்சென்ற ரேவதி மற்றும் சத்தியேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை 27, நெவில் வீதி, திருகோணமலையில் நடைபெற்று பி.ப 3.30 மணியளவில் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


சந்திரசேகரம் : 076 918 7427
ரமேஷன்(பேரன்) : 077 070 7918

தகவல் குடும்பத்தினர்

(526)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 11 . 1947



உதிர்வு 14 . 04 . 2022

### அமரர் தம்பு மார்க்கண்டு

ஆண்டு இரண்டு ஆனதே
அப்பாவைத் தொலைத்து விட்டு
இறந்ததும் தெரியவில்லை,
மறைந்ததும் நினைவில் இல்லை
மறந்தால்தானே நினைப்பதற்கு
நாம் கண்ட தெய்வம் நம்
கண்முன்னே இல்லையே;
இல்லாத போதும் நம் முன்னே
என்றும் நூறாண்டு வாழும்
அப்பா உங்கள் நினைவுகள்
நினைவுகள் அல்ல நிஜங்கள்...

என்றென்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்

(C-0182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிரதிநிதிகள் குழு நியூசிலாந்து விஜயம்

(கொழும்பு)

நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தை திறப்பதற்கான அமைச்சரவையின் தீர்மானத்தை அடுத்து, அமைச்சின் வெளிநாட்டு சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் பிரதீபா சாரம் தலைமையிலான உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் குழு நியூசிலாந்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

குறித்த விஜயமானது நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

இந்த விஜயத்தின் போது, தூதுக்குழுவினர் நியூசிலாந்தின் வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகள் உட்பட பிற நிறுவனங்களுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் சந்திப்புகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்நிலையில், நியூசிலாந்து 2021 இல் இலங்கையில் ஒரு உயர்ஸ்தானிகராலயத்தை திறந்துள்ளதுடன் இது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் ஒரு முக்கிய மைல்க்கல்லாகவும் காணப்படுகின்றது. (நி-6)

# ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை தமிழ் மக்களின் ஆதரவை ரணில் பெற முடியாது

## டிலான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

**ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவரால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, "நாட்டில் உள்ள வாக்காளர்களில் 40 வீதமானோர் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை. 60 சதவீத வாக்குகளை வைத்துத்தான் கருத்துக் கணிப்புகள் வருகின்றன. அது உறுதியான முடிவாக அமையாது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவருக்கு ஆதரவு வழங்கமாட்டார்கள். எனவே வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள மக்களுள் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி பக்கம்தான் தற்போது நிற்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க எப்படித்தான் முயற்சித்தாலும் ராஜபக்ஷக்களுடன் இருக்கும் வரை அவரின் முயற்சி வெற்றியளிக்காது என அவர் தெரிவித்தார். (நி-6)

# மூன்று வருடங்களில் 1700 எயிட்ஸ் நோயாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் பாலியல் சம் மந்தமான நோய்களில் கடந்த 3 வருடங்களில் மட்டும் 1700 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு மையத்தின் பணிப்பாளர் ஜனக வேரகொட தெரிவித்துள்ளார்.

அவர்களில் 18-25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் 550 இற்கும் அதிகமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது முழு நோயாளர்களின் எண்ணிக்கையில் 3 இல் ஒரு பங்காக அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பாலி யல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக வைத்தியர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலைக்கு நாட்டில் அதிகரித்துள்ள ஸ்பாக்களின் எண்ணிக்கை காரணம் எனவும் இளைஞர்கள் அதில் அதிகம் ஈர்க்கப்படுவதாகவும் சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (நி-6)

# இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்களித்த முதல் இலங்கை தமிழ்ப்பெண்

(சென்னை)

இந்தியாவின் தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள, நளினி என்ற இலங்கை பெண் இந்திய மக்களவைத் தேர்தலில் வாக்களித்த முதல் இலங்கை அகதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

திருச்சி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நளினி என்ற பெண்ணுக்கு, இம்முறை திருச்சி பாராளுமன்றத் தொகுதியில் வாக்களிக்க வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் முதல் முறையாக இவருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. (நி-6)

# சந்திரிகாவின் கருத்துக்களை கவனத்தில் எடுக்க தேவையில்லை

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு



(கொழும்பு)

ராஜபக்ஷக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிடும் கருத்துக்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் சாய வைத்து பொதுவேட்பாளராக அவரை களமிறக்கினார். ஆனால் இன்று மாறுபட்ட கருத்தை வெளியிடுகின்றார்.

ஆகவே, ராஜபகஷக்கள் தொடர்பிலும் அவர் வெளியிடும் கருத்துகள் குறித்து அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார். (நி-6)

# அதிகரித்துள்ள ஏற்றுமதி வருமானம்

(கொழும்பு)

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி வருமானம் கடந்த ஆண்டை விட 7.9 வீதம் அதிகரித்து 1,059 மில்லியன் டொலர்களாக உள்ளது.

மேலும், இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான செலவு 35 வீதம் அதிகரித்து 1,378 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2023 பெப்ரவரியில் $39 மில்லியனாக இருந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக் குறை இந்த ஆண்டு பெப்ரவரியில் $319 மில்லியனாக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி அறிக்கைகள் காட்டுகின்றன. (நி-6)



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மே.11,12.2024.

(G-0176)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடிச்சு தூக்கிய டிராவிஸ் ஹெட் தெறிச்சு ஓடிய டில்லி கப்பிட்டல்ஸ்

## ஹைதராபாத்துக்கு கண்கவர் வெற்றி



டிராவிஸ் ஹெட் 32 பந்துகளில் 89 ஓட்டங்களை அநாயசமாக விளாச ஹைதராபாத் ஓட்ட மழை பொழிந்தது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17ஆவது சீசன் நடக்கிறது.

நேற்று தனது சொந்தமண்ணில் முதல் போட்டியில் களமிறங்கிய டில்லி, ஹைதராபாத்தை எதிர்கொண் டது.

டில்லி அணியில் ஷாய் ஹோப் நீக்கப்பட்டு வோர்னர் மீண்டும் சேர்க் கப்பட்டார்.

**"ஜெட்" வேகம்**

ஹைதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா ஜோடி சுப்பர் ஆரம்பம் வழங்கியது. அடுகளம் துடுப் பாட்டத்துக்கு சாதகமாக அமைய, கலீல் அகமட் வீசிய முதல் ஓவரின் 2ஆவது பந்தில் சிக்சர் அடித்து ஓட்டக் கணக்கைத் ஆரம்பித்தார் ஹெட். தொடர்ந்த அடுத்த இரு பந்துகளிலும் பவுண்டரி அடிக்க, 19 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

லலித் யாதவ் 2வது ஓவரை வீசி னார். இதில் அடுத்தடுத்து இரண்டு சிக்சர், ஒரு பவுண்டரி என ஹெட் விளாச, 21 ஓட்டங்கள் கிடைத்தன. அடுத்து நார்ட்ஜேவை அழைத்தார் ரிஷாப். இம்முறை ஹெட், 4 பவுண் டரி, 1 சிக்சர் அடிக்க, 22 ஓட்டங்கள் கிடைத்தது.

**ஹெட் மிரட்டல்**

ஹைதராபாத் அணியின் ஓட்ட எண்ணிக்கை வெறும் 16 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டியது. மீண்டும் வந்த லலித் ஓவரில் அபிஷேக், தன் பங் கிற்கு இரண்டு சிக்சர் அடித்தார். ஹெட், 16ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார். பின் குல்தீப் பந்தை சுழற்றி னார். இதில் அபிஷேக் 3 சிக்சர் விளாச, ஹைதராபாத் ஸ்கோர் "ஜெட்" வேகத் தில் 5ஆவது 100 ஓட்டங்களைக் கடந் தது.

வேறு வழியில்லாத நிலையில் ஹைதராபாத் ஓட்ட வேகத்துக்கு முட்டுக் கட்டை போட, முகேஷ்குமாரை அழைத் தார். மாறாக இவர் வீசிய 6ஆவது ஓவரில் 4 பவுண்டரி, 1 சிக்சர் என 22 ஓட்ங்கள் குவித்தார் ஹெட்.

**குல்தீப் திருப்பம்**

போட்டியின் 7ஆவது ஓவரை வீசிய குல்தீப், டில்லி அணிக்கு திருப்பம் தந்தார். முதல் பந்தில் சிக்சர் அடித்த அபிஷேக்கை (46 ஓட்டங்கள், 12 பந்து) அடுத்த பந்தில் அவுட்டாக்கினார். கடைசி பந்தில் மார்க்ரமை (1) அவுட் டாக்கி அசத்தினார். குல்தீப் வீசிய 9ஆவது ஓவரில் கிளாசன் 2 சிக்சர் அடித்தார். இதே ஓவரில் சிக்சருக்கு ஆசைப்பட்ட ஹெட் (89), ஸ்டப்சிடம் "பிடி" கொடுத்து வெளியேறினார்.

மறுபக்கம் அக்சர் படேல் பந்தில் கிளாசன் (15) போல்டானார். நிதிஷ் குமார், ஷாபாஸ் அகமட் கைகொடு க்க, 14.5 ஓவர்களில் ஹைதராபாத் அணியின் ஓட்ட எண்ணிக்கை 200 ஓட்டங்களை எட்டியது.

**ஷாபாஸ் அரைச்சதம்**

ஐந்தாவது விக்கெட்டுக்காக 67 ஓட்டங்கள் சேர்த்தபோது, குல்தீப் பந்தில் நிதிஷ் குமார் (37) ஆட்ட மிழந்தார். முகேஷ் வீசிய கடைசி ஓவரில் அப்துல் சமது (13), கம்மின்ஸ் (1) அவுட்டாகினர். கடைசி இரு பந்தில் பவுண்டரி, சிக்சர் விளாசிய ஷாபாஸ், அரைச்சதம் கடந் தார்.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களை எடுத்தது. ஷாபாஸ் (59) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ஆரம்பமே தடுமாற்றம்**

கடின இலக்கை விரட்டியடில்லி அணிக்கு சுமாரான ஆரம்பமே கிடைத்தது. அந்த அணி யின் ஆரம்ப வீரர்களான பிரித்வி ஷா 16 ஓட் டங்களிலும், டேவிட் வோர்னர் 1 ஓட்டத்திலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த ஜேக் & பிரேசர் சிறப்பாக ஆடி 18 பந்துகளில் 65 ஓட்டங்களைக் குவித்தார். இவருடன் ஆடிய அபிஷேக் பவெல் 22 பந்து களில் 42 ஓட்டங்களை குவித்தார்.

**ரிஷப் ஆறுதல்**

ஒரு பக்கம் விக்கெட்டுகள் சரிந்த நிலையிலும், அணித் தலைவர் ரிஷப் பந்த் நிதானமா ஆடி 44 ஓட்டங்களை குவித் தார். இவரும் கடைசி ஓவரின் முதல் பந்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் டில்லி 19.1 ஓவர் களில் 199 ஓட்டங்களைக் குவித்து அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 67 ஓட் டங்கள் வித்தியாசத்தில் தோல் வியை தழுவியது.

பந்துவீச்சில் ஹைதராபாத் நடராஜன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (ம-7,10)

# ருதுராஜ், ராகுலுக்கு அபராதம்




லக்னோவில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் சென்னை அணி (176/6, 20 ஓவர்) லக்னோ அணியிடம் (180/2, 19 ஓவர்) தோல்வி யடைந்தது.

இப்போட்டியில் இரு அணிகளும் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீச தவறின. இதனையடுத்து அணித் தலைவர்களான ருதுராஜ் (சென்னை), ராகுலுக்கு (லக்னோ) போட்டி சம்பளத்தில் இருந்து தலா ரூ. 12 லட்சம் இந்திய ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டது.

**பொலார்ட்டுக்கு அபராதம்**

மொகாலியில் நடந்த லீக் போட்டி யில் (ஏப். 18) மும்பை அணி, பஞ்சாப் அணியை வீழ்த்தியது. இப்போட்டியில் பஞ்சாப் வேகப்பந்துவீச்சாளர் அர்ஷ் தீப் சிங்வீசிய 15ஆவது ஓவரின் கடைசி பந்தை சூர்யகுமார் எதிர்கொண்டார்.

பந்து "வைடாக" சென்றது. ஆனால் அம்பயர் "வைட்" வழங்கவில்லை. அப்போது "பெவிலியனில்" அமர்ந் திருந்த மும்பை அணியின் தலைமை பயிற்சியாளர் மார்க் பவுச்சர் "வைட்" என சைகை செய்தார். அருகில் இருந்த ரிம் டேவிட், பேட்டிங் பயிற்சி யாளர் பொலார்ட், "ரிவியூ" கேட்கும்படி சூர்யகுமாரிடம் தெரிவித்தனர்.

சமூகவலைதளத்தில் "வைரலாக" பரவிய இந்த வீடியோ சர்ச்சை ஏற்படுத்தியது.

இது ஐ.பி.எல்., விதிமுறைப்படி குற் றம் என்பதால் ரிம் டேவிட், பொலார்ட்க்கு போட்டி சம்பளத்தில் இருந்து 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

# தினேஷ் கார்த்திக் 'ரெடி'

## உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க




"உலகக் கிண்ணத்தில் ("டி-20") இந்தியா வுக்காக விளையாட தயா ராக இருக்கிறேன்," என, தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தினேஷ் கார்த்திக் (வயது-38). தமிழகத்தை சேர்ந்த இவர், ஐ.பி.எல்., தொடரில் பெங்களூரு அணிக்காக விளை யாடுகிறார்.

7 போட்டிகளில் 2 அரைச்சதம் உட் பட 226 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் "ஸ்டிரைக் ரேட்" 205.45. வரும் ஜூன் 1இல் மே.தீவுகள், அமெரிக்காவில் ஆரம்பமாக வுள்ள "ரி20" உலக கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் விக்கெட் காப்பாளருக்கான இடத்துக்கு தினேஷ் கார்த்திக் தேர்வு செய்யப்பட லாம். இவருக்கு போட்டியாக ரிஷாப் பன்ட், சஞ்சு சாம்சன், இஷான் கிஷான், ராகுல் உள்ளனர்.

இதுகுறித்து தினேஷ் கார்த்திக் கூறுகையில், "மீண்டும் இந்தியாவுக்காக விளையாட வாய்ப்பு கிடைத்தால் நன்றாக இருக்கும். "ரி20" உலக கிண்ணத் தொடரில் பங்கேற்க ஆர்வமுடன் காத்திருக்கிறேன்," என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சுகநல நிலையம் திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

வைத்திய நிபுணர் அ.பாலசுப்ரமணியம் சவித்திரிதேவி தம்பதிகளின் பங்களிப்புடன் சிவபூமி அறக்கட்டளை, யாழ். போதனா வைத்தியசாலை, மருத்துவபீடம் ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள பெண்கள் சுகநல நிலைய திறப்பு விழாவானது இன்று காலை 9.30 மணிக்கு இல. 61, முதனாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சிவபூமி இல்லத்தில் இடம் பெறவுள்ளது.


சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி S.R.K.கனகீஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதோடு சுகநல நிலையத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கான தொடக்கவுரையை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. த.சத்தியமூர்த்தியும் வாழ்த்துரைகளினை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்.சி.ஸ்ரீசற்குணராசா, யாழ்.பல்கலையின் மருத்துபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர். இ.சுரேந்திர குமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (நி-6)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 30.04.2024 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் 30 கியூப் மணல், 9 கியூப் மண் ஏல விற்பனை நடைபெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)



கரவெட்டி பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை குறித்த பிரதேச செயலக மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் குருதிக் கொடையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர். (படம் : மகாலிங்கம்)

# ரூ.25 பில்.ஒதுக்கீடு

(கொழும்பு)

இந்த வருடம் நடைமுறைப் படுத்தப்படும் இளைஞர் விவசாய புத்தாக்க வேலைத்திட்டத்திற்காக 25 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. ட்ரோன் தொழில்நுட்பத்தை வழங்குதல், நெற்பயிர்ச்செய்கைக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தல், நீர்ப்பாசனத்திற்கு தெளிப்பு நீர் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல், அதிக மகசூல் தரும் விதைகளை நடுதல் போன்ற பல திட்டங்களை இதன் கீழ் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

200 பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறைந்தது 200 கிராமங்கள் இளைஞர் விவசாய தொழில் முயற்சி கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# சான்றுப் பொருட்களை உரிமை கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 431(3) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் RE1593 (இயந்திரம்), RV9053 (பெட்டி), வாகன இலக்கத்தைக் கொண்ட வழக்கு இல 57045 உள்ள உழவு இயந்திரம், இழுவைப் பெட்டி மற்றும் அதன் திறப்பு உள்ளிட்ட சான்றுப் பொருளின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறும், அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின் எவ்விதமான முன் அறிவித்தலும் வழங்கப்படாது என்றும் பொருள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# கால்பந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட போட்டிகள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு பலாலி விண்மீன் அணியை எதிர்த்து அண்ணாசிலையடி யூத் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் மோதவுள்ளன. (நி-6-90)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 08 10 1950

மறைவு 14 04 2022



## அமரர். நடராசா மகாலிங்கம்

(மேனாள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

திதி - திரயோதசி

மனமாறாத் துயரோடு உம் நினைவோடு
விழியோடு நீரோடு வழிகடந்து செல்கின்றோம்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்

(0021)

பட்டின சபை வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

# விபத்துக்குள்ளான மோ.சைக்கிள்கள் ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயங்களுக்குள்ளான நபர் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை முதலாம் கட்டை சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த தங்கவேல் விக்னேஸ்வரன் (வயது- 32) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பில் பருத்தித்துறை போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-60)

லங்கா மஹறால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும்
கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை
எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு. குணசிங்கம் லெனின்குமார் அவர்களின்
அன்புச் சகோதரர்
அமரர்.
திரு. குணசிங்கம் ஸ்ரலின்குமார்
அவர்கள் (16.04.2024) செவ்வாய்க்கிழமை
அகாலமரணம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ புனித சாள்ஸ் ம.வி பிரதானவீதி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

**ஜாதகர்**

கன்னி ராசியின் அதிபதி புதன் ஆவார். அவர் உங்களின் 7ஆம் இடத்தில் நீசம் பெற்று வக்கிரம் பெற்றுள்ளார். எனவே நீசபங்க ராஜயோகம் பெறுகிறார். எனவே இந்த வருடம் பெரிய சந்தேகத்தோடு நல்லவை எல்லாம் நடக்குமா என வருந்தும் போது நல்லன நடக்கும். ராசியில் அமர்ந்துள்ள கேது தொட்டதற்கெல்லாம் சந்தேகம் தருவார்.

இந்த சந்தேகம் கொடுக்கும் பயத்தை, ராசிய திபதி நீக்கி வருவதோடு மட்டுமல்ல நன்மையும் தருவார்.

**தனம்**

இந்த வருடம் உங்களுக்கு திருமணம் நடந்தால் அதன்மூலம் பெரும் செல்வம் சேரும். வியாபாரத்தில், நல்லதிஷ்டம் ஏற்பட்டு வரவு அதிகரிக்கும். வெளிநாட்டு பயணம், வர்த்தகம் இவையும் மிக மேன்மை தரும் மற்றும் உங்களின் வெளி வட்டார தொடர்புகள் உங்களின் வங்கி கணக்கு இருப்பை பலப்படுத்தும். நீங்கள் சந்திக்கும் நபர்கள் உங்கள் வாழ்வின் வளமையை உறுதிப்படுத்துவர்.

**வாக்கு:** நிறைய மனிதர்களின் பழக்கம் வருமெனில், அதன் காரணம் உங்களின் இனிமையான சொற்கள் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் சொற் கள் கவர்ச்சிமிகுந்து எனவே பேச்சுமூலம் தொழில் நடத்தும் வழக்கறிஞர்கள், ஜோதிடர்கள், கலை சம்பந்தம் கொண்டோர் இந்த வருடத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**குடும்பம்:** உங்கள் குடும்பம் மகிழ்ச்சி நிரம்பி இருக்கும். வீட்டிற்கு புதுமையான வியத்தகு, புதுமையான பொருட்கள் வாங்கிக்கொடுத்து குடும்பத்தினரை வியப்பு மகிழ்ச்சி கடலில் ஆழ்த்துவீர்கள். உங்களுக்கு உண்டாகப் போகும் மதிப்புமிக்க கௌரவம், குடும்பத்தை ஒருபடி மேல் உயர்த்தும்

**சகோதரம்**


கன்னி

உங்களின் கோபக்கார இளைய சகோதரம் வேலை கிடைப்பதால் அமைதி ஆகிவிடுவார். அவர் அதிக வேலைப் பளுவால் அவதிப்படுவார். நல்ல பணியாட்கள் கிடைப்பார்கள். உங்களின் பூர்வீக நிலத்தை விவசாய குத்தகைக்கு விட நல்ல ஆள் கிடைப்பார்.

**சந்ததி**

வாரிசு வேண்டுவோர் மற்றும் கர்ப்பஸ்த்ரிகள் அடிக்கடி மருத்துவமனை செல்ல வேண்டியிருக்கும். காதல் விடயங்கள் உங்களை மன வேதனையாக்கும். பங்கு வர்த்தகம் மிக நட்டம் தரும். கலைஞர்கள் தொழில் மேன்மை பெற்றாலும், மறைமுக எதிரிகளால் இன்னல் அனுபவிப்பர்

**நோய்**


கன்னி ராசியினர் வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. உங்களை பயமுறுத்துவ தற் காக கூறவில்லை. சற்று எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள்.

**திருமணம்**

"கிடக்கிறது கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மனையில் வை" என்ற கதையாக வீட்டில் ஆயிரம் பிரச்சினை ஓடினாலும் நீங்கள் இஷ்டப்பட்டவருடன் காதல் திருமணம் செய்து கொள்வீர்கள்.

**எதிர்பாராத இடையூறு**

இந்த வருடம் இந்த கன்னி ராசிக்கு வியப்பான அனுகூலம் தென்படுகிறது. ஒன்று 12 ஆம் அதிபதி சூரியன் 8 இல் நின்று, விபரீத ராஜயோகம் பெறுகிறார். இன்னொன்று 8 ஆம் அதிபதி செவ்வாய் 6 இல் மறைந்து அவரும் விபரீத



ராஜயோகம் பெறு கிறார். கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜயோகம் எனும் அமைப்பில் இரு யோகம் கிடைக்கிறது.

முன்னேற வேண்டும் என எண்ணும் கன்னி ராசியினர் இந்த வருடத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். நிஜமாகவே நல்லன எல்லாம் கூடிவரும்.

**அதிஷ்டம்**

இந்த வருடம் அதிஷ்டம் உங்கள் கையை பிடித்துக் கொண்டே சுற்றும். ஆனால் அத்தனை யோக நிகழ்வுகளிலும் ஒரு கள்ளத்தனம், திருட்டுத் தனம், ஒளிந்திருக்கும்.

**தொழில்**

இந்த வருடம் உங்களில் நிறைய கன்னி ராசியினர் அரசியல் தொடர்புடைய தொழிலில் ஈடுபடுவீர்கள்.

அனைத்தையும் 10 ஆம் அதிபதியுடன் கூட உள்ள ராகு செவ்வனே செய்து ஊக்கப்படுத்துவதால் தொழில் ஓரளவு முன்னேற்றம்.

**லாபம்**

உங்கள் லாப அதிபதி தொழில் ஸ்தானத்தில் அமர்ந்துள்ளார். எனவே நீங்கள் வாழ்வின் எந்த தளத்தில் இருப்பினும் தொழில் லாபம் நன்கு கிடைக்கும். இந்த வருடம் லாபம் வெற்றி உங்களை அருகில் வைத்து அழகு பார்க்கும்.

**விரயம்**

இந்த விரயாதிபதி சூரியன் உச்சமெனில் அதிக செலவு உண்டு. சரிதான். ஆனால் அவர் 8 ஆம் வீட்டில் மறைந்து விபரீத ராஜயோகம் பெறுகிறார். எனவே உங்கள் செலவு அலைச்சல் என அனைத்தும் உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். நீங்கள் எவ்வளவு அலைகிறீர்களோ, எத்தனை செலவு செய்கிறீர்களோ, அத் தனை அளவு வெற்றி உங்களுக்கு கிடைக்கும் என்பது உறுதி.

**பரிகாரம்**

செவ்வாய் சனி சேர்க்கைக்கு + புதன்கிழமை வில்வ மாலை, தயிர் சாதம், அகல் விளக்கில் 23 மிளகை பச்சை நிறத் துணியில் மூட்டை கட்டி, தாமரை தண்டு திரியில் தீபம் பைரவருக்கு ஏற்றவும். கன்னி ராசி 100% மார்க் வாங்கும்.

(தொடரும்)

# இராசிபலன்

21.04.2024
சித்திரை 08, ஞாயிற்றுக்கிழமை,
திரயோதசி பின்னிரவு 2.19 மணிவரை

உத்தரம் பிற்பகல் 6.13 மணிவரை
சுபநேரம் -9.01-10.31 மணிவரை
இராகுகாலம் -4.31-6.01 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்.
உத்தராடம், திருவோணம்.

**வளவன்**


மேஷம்

மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


கடகம்

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.


துலாம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப விரயங்கள் கூடும் நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.


மகரம்

கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பகையொன்று நட்பாகலாம், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள்.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.


விருச்சிகம்

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர் பகை அகலும், காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணத்தால் மன உழைச்சல்கள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.


மிதுனம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


கன்னி

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அக்கறை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.


தனுசு

தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.


மீனம்

நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பிர்கள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி மேலோங்கும் நாள்.

மனத்திருப்தியே மனிதனின் மகத்தான பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 437

Viber 076 636 3378



# ஈரான் அதிபரை அழைப்பதா? மறுப்பதா?

## திரிசங்கு நிலையில் இலங்கை

அணு குண்டுப் பரிசோதனை மேற்கொண்டதாக அமெரிக்கா ஈராக்கைத் தாக்கியது. ஆனால் அங்கு அணுப்பரிசோதனை எவையும் மேற்கொள்ளவில்லை என்பது பின்னர் உறுதியானது.

அதுபோல லிபியாவையும் தாக்கியது. அங்கும் அணுப்பரிசோதனை மேற்கொண்டதாக ஆதாரங்கள் இல்லை.

அணுப்பரிசோதனை செய்வதாக வடகொரியாவின் மீது குற்றம் சாட்டுகிறது அமெரிக்கா. ஆனால் ஏன் அவர்களைத் தாக்கவில்லை.

உண்மையாகவே அவர்களிடம் அணு ஆயுதம் இருக்கிறது. அதனால்தான் அவர்களை அமெரிக்கா தாக்கவில்லை.

இது சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட செய்தி. நகைச்சுவைக்காக எழுதப்பட்டிருந்தாலும் இதில் பல உண்மைகள் இருக்கவே செய்கின்றன.

இந்த உலகம் அமைதி இழந்து பல வருடங்கள் கடந்து விட்டது.

ஒரு காலத்தில் அமைதிப் பூங்காவாக இருந்த உலகில் ஆயுதப்போர் என்று தொடங்கியதோ அப்போதிலிருந்து உலகம் அழிவுப் பாதையை நோக்கி நடக்கத் தொடங்கிவிட்டது.

ஆயுதம், படை பலம் உள்ளவர்களே உலகின் ராஜாக்கள் என்ற எண்ணத்தின் வெளிப்பாடு உலக நாடுகளை ஆட்டிப் படைக்கிறது.

இதில் அமெரிக்காவின் ஆளுகை அதிகரித்திருக்கவே செய்கிறது. எங்கு எது நடந்தாலும் அங்கே அதை தமக்கு சாதகமாக கையாளும் திறனைக் கொண்ட அமெரிக்கா உலக வல்லரசு என்ற வாழ் நாள் பட்டத்தை வைத்திருப்பதும் இதற்கு காரணமாகும்.

அமெரிக்காவின் ஏகாதிபத்திய சிந்தனையே உலக நாடுகளில் போர் நிலைத்து நிற்கக் காரணம் என பலர் கண்டனம் தெரிவித்தாலும் அமெரிக்காவின் மூக்கு நுழைப்புகள் தொடரவே செய்கின்றன.

அமெரிக்க இரட்டைக் கோபுர பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் அரபு நாடுகளின் எதிர்ப்பை வெகுவாகப் பெற்றுக் கொண்டது அமெரிக்கா.

இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பின் அமெரிக்க எதிர்ப்பு வாத நாடுகள் பட்டியலில் அரபு நாடுகள் வெகுவாக இணைந்து கொண்டன.

இதில் ஈரான் மிக முக்கியமான நாடாக இருந்து வருகிறது.

ஈரான் அமெரிக்க எதிர்ப்பை வெளிப்படையாகவே மேற்கொண்டு வந்தததுடன் எம்மைத் தாக்கினால் பதிலுக்கு நாம் தாக்குதல் நடத்துவோம். அந்தத் தாக்குதல் மிக மோசமான தாக்குதலாக இருக்கும் என அமெரிக்காவை வெளிப்படையாக எச்சரித்தது ஈரான்.

இந்நிலையில் அமெரிக்காவின் செல்வாக்கினால் ஈரானுக்கு பலதரப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்தது சர்வதேசம்.

இவை எவற்றிற்கும் அஞ்சாத ஈரான் தொடர்ந்து தனது நாட்டை பலப்படுத்தும் செயற்றிட்டத்தை மேற்கொண்ட வண்ணமே உள்ளது.

அமெரிக்காவின் செல்லப்பிள்ளை என வர்ணிக்கப்படும் இஸ்ரேல் போரை விரும்பும் ஒரு நாடு. அத்துடன் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து அதை கையகப்படுத்தி பாலஸ்தீனம் என்ற ஒரு நாடே இல்லை. அது முழுவதும் இஸ்ரேலுக்கு சொந்தமான பூமி என வன்மத்தை கக்கி வருகிறது.

பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் ஹமாஸ் அமைப்பை அழிப்பதாக கூறி பாலஸ்தீனர்களை கொடூரமாக கொன்று குவிக்கிறது இஸ்ரேல்.

ஹமாசிற்கு எதிரான போர் எனக் கூறிக் கொண்டு பாலஸ்தீனர்களை கொன்று குவிக்கும் இஸ்ரேலின் கோர தாண்டவத்தின் வெளிப்பாட்டை வன்மையாகக் கண்டித்து வந்தது ஈரான்.

நிலை இதுவாக இருக்கையில் கடந்த முதலாம் திகதி சிரிய தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் நாட்டின் மூத்த இராணுவ அதிகாரிகள் மூவர் பலியாகினர்.

குறித்த தாக்குதலை வன்மையாகக் கண்டித்த ஈரான் இஸ்ரேலுக்கு தக்க பதிலடி வழங்கப்படும் எனத் தெரிவித்து சில நாட்களிலேயே இஸ்ரேல் மீது தாக்குதலைத் தொடுத்துள்ளது.

பதிலுக்கு இஸ்ரேலும் ஈரான்மீது தாக்குதலை நடத்தி வருகிறது.

குறித்த போர் பதற்றம் உலக நாடுகளை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. ஈரான் - இஸ்ரேல் முறுகல் நிலை ஆரம்பித்த அடுத்த கணமே உலக சந்தையில் எரிபொருள், தங்கம் என்பவற்றின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

ஈரான்-இஸ்ரேல் போர் தீவிரம் பெறுமாக இருந்தால் நிச்சயம் அது உலகப் போருக்கு வழிவகுக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இங்கு தான் இலங்கையின் நகர்வுகளை அமெரிக்காக உட்பட சர்வதேச நாடுகள் கவனிக்கத் தொடங்கியுள்ளன.

ஆம், ஈரானின் அதிபர் இப்ராஹிம்ரைசி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ள உள்ளார் என்பதே குறித்த விடயத்திற்கான காரணமாகிறது.

**“ அமெரிக்காவின் அதீத தலையீட்டுடன் ஈரானை இலக்கு வைக்கும் இஸ்ரேல். இது உலகப் போருக்கு வழிவகுக்கும்.**

**இவ்வாறான நிலையில் ஈரான் அதிபர் இலங்கைக்கு விஜயம் செய்வதை அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட அமெரிக்க ஆதரவு நாடுகள் ஒரு போதும் விரும்பாது.**



ஈரானின் நிதி உதவியில் உருவாகியுள்ள உமா ஓயா அபிவிருத்தித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்விற்கே ஈரான் அதிபர் இலங்கைக்கு வரவிருக்கிறார்.

இஸ்ரேல்-ஈரான் போர் பதற்றம். அமெரிக்காவின் அதீத தலையீட்டுடன் ஈரானை இலக்கு வைக்கும் இஸ்ரேலின் போர்க்கலங்கள். இது உலகப் போருக்கு வழிவகுக்கும் என்ற ஆய்வாளர்களின் கணிப்பு.

இவ்வாறான நிலையில் ஈரானின் அதிபர் இலங்கைக்கு விஜயம் செய்வதை அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட அமெரிக்க ஆதரவு நாடுகள் ஒரு போதும் விரும்பாது.

ஈரானின் நிதி உதவியில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்விற்கு ஈரான் அதிபரை அழைப்பதா? மறுப்பதா? என்ற திரிசங்கு நிலையில் இலங்கை உள்ளது.

ஒருவேளை ஈரான் அதிபர் இலங்கைக்கு வந்தால் அடுத்த ஐ.நா அமர்வில் இலங்கையில் நடந்த போர்குற்ற மீறல் விடயம் மீண்டும் தோண்டி எடுக்கப்படும்.

அதை அமெரிக்கா பார்த்துக்கொள்ளும் என்பதும் இலங்கைக்கு நன்கு தெரியும்.

ஈரான் அதிபரை அழைத்தால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டிவரும். ஈரான் அதிபரின் வருகையை நிறுத்தினால் அரபு நாடுகளின் எதிர்ப்பிற்கு ஆளாக நேரிடும்.

இதில் எந்த முடிவை இலங்கை எடுக்கும் என உலக நாடுகள் உற்று நோக்குகின்றன.


**அபிமன்யு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



த.நடனேந்திரன்


சிவஸ்ரீ முத்துக்குருக்கள்


எதிர்வீரசிங்கம்


பண்டிதர் கடம்பேசுவரன்


க. ஈஸ்வரன்


அ.ஜெயராமன்


வரதராஜ சர்மா

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இந்த மண்ணில் எங்களோடு வாழ்ந்து துறைசார் ரீதியில் அரும் பணியாற்றிய பலர் நம்மை விட்டுப் பிரிந்துள்ளனர்.

அவர்களின் பிரிவு எமக்கு மிகுந்த வேதனையையும் ஈடு செய்ய முடியாத இழப்பையும் தந்துள்ளது.


அந்த வகையில் எம்மை விட்டுப் பிரிந்த நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய குருமணி சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் முத்துக் குருக்கள், ஆசிய ஒலிம்பிக் வீரர் எதிர்வீரசிங்கம், பண்டிதர் கடம்பேசுவரன், தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரியாகவும் ஆன்மீகச் சொற்பொழிவாளராகவும் விளங்கிய கணபதிப்பிள்ளை ஈஸ்வரன், வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன், மிருதங்க வித்துவான் சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜ சர்மா, வலிமேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் (கஜன்) ஆகியோருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** என்ன பண்டிதர் ஐயா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில கல்வி மாநாடு நடக்குது. நீங்கள் அங்க போகல்லயோ.

**பண்டிதர்:-** அழையாத இடங்களுக்குப் போறது அவ்வளவு நல்லதல்ல.

**கங்காணி:-** ஏன் பண்டிதர் ஐயா உங்களுக்கு அழைப்பு அனுப்பல்லயோ.



## பொன்விழா நிறைவையொட்டி நுழைவாயில் வளைவு...

**பண்டிதர்:-** நாங்கள் அங்க போய் ஏடா கூடமாகக் கேள்வி கேட்டால் அது ஏற்பாட்டாளர்களுக்குக் கரைச்சல் தானே.

அதால ஏடா கூடமாகக் கேள்வி கேட்பவர்களுக்கு அழைப்பை அனுப்பாமல் விடுவம் எண்டு சிலர் நினைச்சிருப்பினம்.

**மூப்பர்:-** ஓ! நாங்கள் எங்கட துறையில சாதிச்சமோ இல்லையோ, எப்படி மற்றவர்களை வெட்டி விழுத்திறது என்பதில எங்களவிட உலகத்தில வேறு யாராலும் முடியாது.

ஆகையால தங்களுக்குச் சேர்மானமானவர்களுக்கு அழைப்பை அனுப்பிவிட்டு, மற்றவர்களை தட்டி விடுகிற கலாசாரம் எங்களிட்ட இருக்குது. அது கல்வி மாநாட்டிலும் பிரதி பலிச்சிருக்குது. அவ்வளவு தான்.

**பண்டிதர்:-** இந்த அழைப்புகள் தொடர்பில் நான் அலட்டிக் கொள்வதில்ல. ஆனால் ஒரு கவலை இருக்கத்தான் செய்யுது.

**சாத்திரியார்:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 ஆம் ஆண்டு எங்கட மண்ணில ஆரம்பிக்கப்பட்டு 2024 இல ஐம்பதாவது ஆண்டை நிறைவு செய்கிறது.

பொன்விழாவை யொட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில கல்வி மாநாடு நடத்தப்படுகிற போதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர நுழைவாயில் தூண்களில இருந்த இரண்டு நந்திகளும் அகற்றப்பட்டு அந்த நுழைவாயில் தூண்கள் வெறித்துக் கிடக்குது.

கல்வி மாநாடு நடக்கிற இந்த நேரத்திலயாவது அந்த இரண்டு நந்திகளையும் வைச்சிருக்கலாம்.

என்ன செய்யிறது நாங்களே எங்கள அறுத்துக் கழுவ நினைக்கிற போது இதுகளைத் தொடர்ந்தும் கதைத்து எந்தப் பிரயோசனமும் இல்லை.

**வாத்தியார்:-** நந்தி என்பது தர்மத்தின்ர அடையாளம். அப்ப அந்த அடையாளம் இல்லாமல் செய்யப்படுகிற தெண்டால், அதன் பொருள் என்ன என்பதை நாங்கள் புரிந்து கொள்ளலாம் தானே!

**சிறாப்பர்:-** ஏன்? வாத்தியார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன் விழாவையொட்டி கல்வி மாநாடு நடக்குது. அந்த நேரத்திலயாவது, உடனடியாக இரண்டு நந்திகளையும் அந்த இடத்தில வையுங்கள் எண்டு சொல்லுறதுக்கு யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில ஒருவரும் இல்லையோ.

**வாத்தியார்:-** சிறாப்பர், சைவப் பெருவள்ளல் சேர். பொன் இராமநாதன் ஈந்தளித்த சொத்துத்தான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

அந்த வரலாற்றை இல்லாமல் செய்யிறதா இருந்தால் முதலில "நந்தி"யை இல்லாமல் செய்யவேணும்.

அது தான் நடக்குது. நடக்கட்டும். நாங்கள் கதைத்து எந்தப் பிரயோசனமும் இல்லை.

இனி பரமேஸ்வரப் பெருமான் பார்த்துக் கொள்ளட்டும்.

என்னைப் பொறுத்த வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன் விழாவையொட்டி பரமேஸ்வராச் சந்தியில ஒரு பிரமாண்டமான நுழைவாயில் வளைவு அமைக்கப்பட வேணும்.

அந்த நுழைவாயில் வளைவில இருமருங்கிலும் நந்தி. நடுவில் ஆடும் தில்லைக்கூத்தன். அவன் அடியில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் பிரபு, அவரது பாரியார் சீமாட்டி லீலாவதி இராமநாதன் மற்றும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் இருக்க வேணும். அப்படியாக பரமேஸ்வரா சந்தியில பிரமாண்டமான நுழைவாயில் வளைவை அமைக்க வேணும்.


**விதானையார்:-** வாத்தியார், அதை யார் அமைக்கிறது.

**வாத்தியார்:-** திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் சேர். பொன் இராமநாதன் அறக் கட்டளையும் பரமேஸ்வரா ஆலய பரிபாலன சபையும் இணைந்து அந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெற்கின் அதிவேகப் பாதை அங்காடி ஒன்றில் ஐந்து நெஸ்காபிக்கு பத்தாயிரம் ரூபாய் எம்மிடம் அறவிட்டார்கள். அது எப்படி வியாசரே?



# வியாசர் பதில்கள்



இந்தியத் தேர்தலில் சீமான் வென்றால் ஈழத் தமிழருக்கு தீர்வு கிடைக்குமா வியாசரே?

**சுதன் குப்பிழான்**

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி தமிழர் ஒற்றுமையை சர்வதேசத்திற்கு பறை சாற்றுவோமா வியாசரே?**

நிச்சயமாக பறைசாற்றலாம். இலங்கை வரலாற்றில் சிறுபான்மைத் தமிழ் தரப்பின் ஆதரவில் வென்ற எவராவது தமிழினத்திற்கு நல்லது செய்திருக்கிறார்களா? இல்லையே.

இதன்பிறகு நாம் ஏன் பெரும்பான்மை போட்டியாளரை ஆதரிக்க வேண்டும். நாம் ஆதரவளித்து அவர் வென்ற பின் எப்படியும் எமக்கு நாமம் அடிப்பது உறுதி என்று தெரிந்த பின் அவரை ஆதரிப்பது முட்டாள்தனமல்லவா?

ஆதலால் எமது பலம் முழுவதையும் ஒரு மையப் புள்ளியில் குவித்து எம் பலத்தையும் ஒற்றுமையையும் உலகிற்கு காட்டும் சந்தர்ப்பமாய் இந்த ஜனாதிபதித் தேர்தலை கையாண்டால் நல்லது என்பதே எம் தாழ்மையான கருத்து.

**டனுஷாந் திருநெல்வேலி**

**இந்தியத் தேர்தலில் சீமான் வென்றால் ஈழத் தமிழருக்கு தீர்வு கிடைக்குமா வியாசரே?**

சில விடயங்கள் பேச்சளவில் நன்றாக இருக்கும். ஆனால் அது நடைமுறைச் சாத்தியமற்றது. இதற்கு நல்ல ஒரு உதாரணம்.

தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுப்பேன்.

தமிழினம் நிம்மதியாய் வாழ்வதற்கு வழி செய்வேன்.

தமிழ் நிலத்தில் ஒரு குண்டுமணியளவைக் கூட சுரண்ட விட மாட்டேன்.

தமிழினம் தன்மானத்துடன் வாழ என்னை பாராளுமன்றம் அனுப்புங்கள்.

மேற்குறித்த சொல்லாடல்கள் இப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் தமிழ் அரசியல் வாதிகளின் தேர்தல் விஞ்ஞாபனம். இவை ஏதாவது இப்போது சாத்தியப்படுகிறதா? இல்லைத்தானே. இதுபோல தான் அதுவும். பேச்சளவில் எடுபடும். செயலளவில் எடுபடாது.

**இளங்கோ மானிப்பாய்**

**நடுநிலைக்கப்பால் நியாயத்தின் பால் நிற்பதே ஊடக தர்மமாகும்?**

நீங்கள் கூறிய இரண்டும் வேறுபட்டதல்ல. ஒன்றுபட்டதே. ஒருவிடயத்தில் நியாயத்தின் பக்கம் ஒருவர் நிற்கிறார் எனின் அது நடுநிலைதான்.

நடுநிலை எனின் எந்தப்பக்கமும் சாயாமல் இருப்பது என பலர் கருதுகிறார்கள்.

நியாயத்தின் பக்கம் சாய்ந்தால் அதில் தவறேதும் இல்லை.

அங்கும் இங்கும் நடப்பதை மட்டும் கூறிக் கொண்டவருக்கு நடுநிலைவாதி பெயரல்ல. அவரின் பெயர் அறிவிப்பாளர்.

**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**076 097 3126**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுந்தரம் துன்னாலை**

**தமிழர் தரப்பில் ஒரு பகுதியினர் ஜனாதிபதித் தேர்தல் வேண்டும் என்கிறார்கள். வேறொரு பகுதியினர் வேண்டாம் என்கிறார்கள். இது ஏன் வியாசரே?**

வேண்டும் வேண்டாம் எனக்கூறுவது அவர்கள் ஜனநாயக உரிமை.

ஆனால் அந்த ஜனநாயக பேச்சுக்குள் ஏதும் பணநாயகம் இருக்காமல் இருந்தால் நன்று.

தமிழ்த் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி, அவரை ஆதரித்து, அனைத்து தமிழர் வாக்குகளையும் அவருக்கு இட்டு, தமிழர் பலத்தை காட்டினால் அதனால் எமக்கு பயன் ஏதும் உண்டா?

ஆனால் பெரும்பான்மை வேட்பாளர் ஒருவரை ஆதரித்தால். அவரை ஆதரிப்பதற்கு, அவருக்காக பிரசாரம் செய்வதற்கு, அவருடன் ஒன்றாய் மேடையில் தோன்றுவதற்கு, அப்படி, இப்படியென்று சில-பல கோடிகளைப் பெறும் வாய்ப்பை ஏன் தவற விட வேண்டும் என்ற எண்ணமும் இருக்கலாம்.

**தவராஜன் கொற்றாவத்தை**

**தேர்தல் காலங்களில் நாட்டைக் கட்டியெழுப்புவேன் என்கிறார்களே. அதற்கு எவ்வளவு கல், மண், சீமெந்து வேண்டுமென்பதை கூறுகிறார்களில்லையே?**

நாட்டில் உள்ள அரசியல்கட்சிகள் எதுவும் மக்கள் மீது அக்கறை கொண்டவை இல்லை.

தமது அரசியல் சுய இலாபத்திற்காக எந்த எல்லை வரை சென்று வரக்கூடியவர்கள். எப்படிப்பட்ட கடுமையான முடிவுகளையும் எடுப்பார்கள்.

இதற்கு வன்னி இறுதி யுத்தம் சரியான உதாரணம்.

ஆம், நாட்டின் மீது அக்கறை கொண்ட எவரும் இவ்வாறான இழப்புக்களைக் கண்டு அதைத் தொடர முற்பட்டிருக்க மாட்டார்கள்.

ஆனால் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் அதற்கு எதிர்மாறு. வரலாற்றில் தமது பெயர் பொறிக்கப்பட வேண்டும். அதற்கு எத்தனை உயிரையும் விலை பேசலாம். ஒரு நல்ல ஒப்பந்தகாரரைப் பிடித்து இதற்கான கூறுவிலையை பெற்று விடுவோமே.

**மதுவன் மீசாலை**

**ஜே.வி.பியின் மாநாட்டிற்கு அழைப்பில்லாமல் சுமந்திரன் சென்றாராமே? உண்மையா?**

அழையா விருந்தில் நுழையாதே என்றொரு பழமொழியுண்டு. இதை பிரபல சட்டத்தரணியான சுமந்திரன் நன்கறிவார்.

நாம் அழைக்கவில்லை ஆனால் பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி சுமந்திரன் எமது மாநாட்டுக்கு வந்தார் என பொது வெளியில் அனுரகுமார திஸாநாயக்க கூறியதே பெரிதாகப் பார்க்கப்பட்டது.

இதைவிட இதில்வேறு எதுவும் இருப்பதாய் தெரியவில்லை. ஏனெனில் ஜே.வி.பிக்கு வடக்கில் அவ்வளவு வாக்குவங்கி இல்லை என்பதையும் நாம் இவ்விடத்தில் நுணுகிப் பார்ப்பது சிறப்பு.

**விஜயரட்ணம் யாழ்ப்பாணம்**

**தெற்கின் அதிவேகப் பாதை அங்காடி ஒன்றில் ஐந்து நெஸ்காபிக்கு பத்தாயிரம் ரூபாய் எம்மிடம் அறவிட்டார்கள். அது எப்படி வியாசரே?**

இதற்கு நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

800 ரூபாவிற்கு வடை விற்றவரும், கடை உரிமையாளரும் கைது என்றால், ஒரு கோப்பியை 2000 ரூபாவிற்கு விற்றவரை என்ன செய்திருக்க வேண்டும்.

உங்களிடம் ஆதாரம் இருந்தால் இப்போதும் அதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: இருவர் உள்ளம்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: கே.வி. மகாதேவன்



நதி எங்கே போகிறது கடலைத் தேடி
நாளெங்கே போகிறது இரவைத் தேடி
நிலவெங்கே போகிறது மலரைத் தேடி
நினைவெங்கே போகிறது உறவைத் தேடி
நதி எங்கே போகிறது கடலைத் தேடி
நாளெங்கே போகிறது இரவைத் தேடி
நிலவெங்கே போகிறது மலரைத் தேடி
நினைவெங்கே போகிறது உறவைத் தேடி
நதி எங்கே போகிறது கடலைத் தேடி

ராகங்கள் நூறு வரும் வீணை ஒன்று
மேகங்கள் ஓடி வரும் வானம் ஒன்று
ராகங்கள் நூறு வரும் வீணை ஒன்று
மேகங்கள் ஓடி வரும் வானம் ஒன்று
எண்ணங்கள் கோடி வரும் இதயம் ஒன்று
எண்ணங்கள் கோடி வரும் இதயம் ஒன்று
இன்பங்கள் அள்ளி வரும் பெண்மை ஒன்று

நதி எங்கே போகிறது கடலைத் தேடி
நாளெங்கே போகிறது இரவைத் தேடி
நிலவெங்கே போகிறது மலரைத் தேடி
நினைவெங்கே போகிறது உறவைத் தேடி...

பள்ளியறை பெண்மனதில் ஏக்கம் ஏக்கம்
பக்கத்தில் துணையிருந்தால் வெட்கம் வெட்கம்
பள்ளியறை பெண்மனதில் ஏக்கம் ஏக்கம்
பக்கத்தில் துணையிருந்தால் வெட்கம் வெட்கம்
இளமைக்குள் ஆடிவரும் இனிமை கண்டு
இளமைக்குள் ஆடிவரும் இனிமை கண்டு
இன்றே நாம் காணுவது இரண்டில் ஒன்று


நதி எங்கே போகிறது கடலைத் தேடி
நாளெங்கே போகிறது இரவைத் தேடி
நிலவெங்கே போகிறது மலரைத் தேடி
நினைவெங்கே போகிறது உறவைத் தேடி
நதி எங்கே போகிறது கடலைத் தேடி
ம்ம்ம்ம்ம்ம் ம்ம்ம்ம்ம்

# கவனம் ஈர்க்கும் புதுமுகங்கள்!

கோடிகள் கொட்டி வாங்கப்பட்ட ஸ்டார் வீரர்களைவிட இதுவரை பெரிதாக எந்தவித அடையாளமும் கொண்டிராத புதுமுக வீரர்களே ஐ.பி.எல் நடப்பு சீசனின் நாயகர்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களால்தான் இந்த சீசனும் சுவாரஸ்யமடைந்திருக்கிறது. கவனத்தை ஈர்க்கும் புதுமுக வீரர்களைப் பற்றிய அலசல் இங்கே...

### மயங்க் யாதவ் (லக்னோ சூப்பர் ஜயன்ட்ஸ்)

மயங்க் யாதவ் நடப்பு சீசனின் வேகப்புயல். லக்னோ அணிக்காக எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அறிமுகமானார். பஞ்சாப்புக்கு எதிராக முதல் போட்டியிலேயே மூன்று விக்கெட்டுகள். அந்த மூன்று விக்கெட்டுகள்தான் போட்டியை வென்று கொடுத்தன. முதல் போட்டியிலேயே ஆட்ட நாயகன் விருதை வென்றார். அதோடு நிற்கவில்லை. அடுத்த போட்டியிலும் அதே அட்டகாச பந்துவீச்சு. அதே மாதிரியே மீண்டும் ஆட்டநாயகன். கிரிக்கெட் உலகமே இவரைப் பற்றிப் பேசத் தொடங்கியது. இவர் எடுத்த விக்கெட்டுகளைத் தாண்டி விக்கெட் எடுத்த விதம்தான் அதிக கவனத்தை ஈர்த்தது. காரணம், அவரின் வேகம். 150 கி.மீ இற்கும் அதிக வேகத்தில் வீசுகிறார். அதிக வேகங் களுக்கு ஆடிப் பழகிய அவுஸ்திரேலியா, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேட்டர்களே இவரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறுகின்றனர். பேட்டர்களால் இவரின் பந்துகளை எதிர்கொள்ளவே முடியவில்லை. பீட்டன் ஆகிறார்கள். அடிக்க நினைத்தால் ஷாட்டை நிறைவு செய்வதற்குள் பந்து பட்டில் மோதி விக்கெட்டாக மாறிவிடுகிறது. 157 கி.மீ வேகத்துக்கு ஒரு பந்தை வீசியிருக்கிறார். கற்பனை செய்ய முடியாத வேகம். இந்த வேகத்துக்காகவே இந்திய அணியில் இவருக்கான கதவுகள் சீக்கிரம் திறக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், அடிக்கடி காயங்களில் சிக்குவது இவருக்கு பிரச்சினையாக இருக்கக்கூடும்.



### சஷாங்க் சிங் (பஞ்சாப் கிங்ஸ்)

நானி நடிப்பில் தெலுங்கில் வெளியான "ஜெர்சி" படத்தில் நாயகனுக்கு 36 வயதாகியிருக்கும். அதன்பிற்கு கடினமாகப் போராடி கிரிக்கெட்டில் சாதிப்பதைப்போல அந்தப் படத்தின் கதை இருக்கும். கிட்டத்தட்ட அந்தக் கதையின் நாயகனைப் போன்றவர்தான் சஷாங்க் சிங். 32 வயது. பஞ்சாப் அணிக்காக ஆடிவருகிறார். கடந்த ஆண்டு நடந்த மினி ஏலத்தில்தான் பஞ்சாப் அணியால் வாங்கப்பட்டார். ஆனால், உண்மையில் பஞ்சாப் அணி வாங்க நினைத்த சஷாங்க் சிங் வேறொருவர். பெயர்க் குழப்பத்தில் அவருக்கு பதிலாக 32 வயது சஷாங்க் சிங்குக்குக் கையைத் தூக்கி வாங்கிவிட்டார்கள். அதன்பிறகு வீரரை அவர்களால் மாற்ற முடியவில்லை. பிறகு வந்து நாங்கள் வாங்க நினைத்த சஷாங்க் சிங்கே இவர்தான் என ஏதேதோ கதை சொன்னார்கள். இப்படி குழப்ப களேபரங்களுடன் வாங்க பட்டவர்தான் சஷாங்க் சிங். ஆனால், இப்போது அணிக்குள் வந்து பினிஷராக அசத்திவருகிறார். குஜராத்துக்கு எதிரான போட்டியில் 200 டார்கெட்டை ஸ்டார் வீரர்களின் துணையின்றி 200+ ஸ்ட்ரைக் ரேட்டில் ஆடி வெல்ல வைத்தார். சன்ரைசர் ஸ்ீக்கு எதிரான போட்டியிலும் கடைசி வரை நின்று போராடினார். வெறும் 20 லட்ச ரூபாய்க்கு அதுவும் குழப்பத்தில் வாங்கப்பட்ட வீரர் ஒருவர் இப்போது பஞ்சாப் அணிக்காக விலை மதிப் பற்ற வகையில் பெர்பாம் செய்து வருகிறார்.



### அசுதோஷ் சர்மா (பஞ்சாப் கிங்ஸ்)

அசுதோஷ் சர்மா, சஷாங்க் சிங்கின் கூட்டாளி. சஷாங்க் அடித்த இரண்டு போட்டிகளிலும் அவருடன் கூட்டணி அமைத்து ஒத்துழைப்பு நல்கியவர் அசுதோஷ் சர்மாதான். அதிரடியாக பெரிய பெரிய சிக்சர்களைப் பறக்க விடுகிறார். நவீன இருபது-20 ட்ரெண்டுக்கு ஏற்ற வகையில் அதிக சிக்சர்களைப் பறக்க விடும் திறன் அவரிடம் இருக்கிறது. குஜராத்துக்கு எதிரான போட்டியில் வலுவான பந்துவீச்சு படைக்கு எதிராக கடைசி 5 ஓவர்களில் இவர் ஆடிய ஆட்டம்தான் போட்டியில் பஞ்சாபை வெற்றியை நோக்கி நகர்த்தியது. சன்ரைசர்ஸ்ீக்கு எதிரான போட்டியில் கடைசி ஓவரில் 29 ரன்கள் தேவைப்பட்ட சமயத்தில் போராடி 27 ரன்கள் வரை அடித்து, 'நம் வெற்றியைப் பறித்துவிடுவாரோ?' என்று சன்ரைசர்ஸ் அணியைப் பதற வைத்தார்.



### நிதிஷ் ரெட்டி (சன்ரைசர்ஸ் ஹைதராபாத்)

சன்ரைசர்ஸ் அணியின் புதிய அறிமுகம் நிதிஷ். மிடில் ஆர்டரில் ஒரு அனுபவமான பேட்டருக்குரிய பக்குவத்தோடு ஆடி சாதித்துவருகிறார். ட்ராவிஸ் ஹெட், மார்க்ரம், க்ளாசென் என சன்ரைசர்ஸ்அணியின் அத்தனை ஸ்டார்கள். அனைவருமே அதிரடியில் கலக்கக் கூடியவர்கள். அவர்களைத்தாண்டி ஒருவர் வெளிச்சம் பெறுகிறாரெனில் அவரின் ஆட்டம் அந்த அணிக்கு எத்தகு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை நாமே முடிவு செய்துகொள்ளலாம். அந்த ஸ்டார் வீரர்கள் பெர்பாம் செய்யாத போட்டிகளில்கூட இவர் சிறப்பாக பட்டிங் ஆடி அணியைக் கரை சேர்க்கிறார்.



### யாஷ் தாகூர் (லக்னோ சூப்பர் ஜயன்ட்ஸ்)

இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதற்கு லக்னோ அணி தயங்குவதே இல்லை. மயங்க் யாதவ் வரிசையில் இந்த சீசனில் வாய்ப்பைப் பெற்ற இன்னொரு வீரர் யாஷ் தாகூர். சீசனில் ஆடிய முதல் போட் டியிலேயே குஜரா த்துக்கு எதிராக 5 விக்கெட்டுகள். ஆட்டநாயகன் விருதையும் வென்றிருக்கிறார். நடப்பு சீசனில் இன்னும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போவதற்கான அறிகுறியைக் காண்பித்துவருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்பானையில் தண்ணீர் குடிப்பதால் என்ன நன்மை?

**ஒருவர், தன் உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் அருந்துகிறாரா என்பதை, வெளியேறும் சிறுநீரின் அளவு மற்றும் நிறத்தை வைத்து அறிந்து கொள்ளலாம். எரிச்சலுடன் வெளியேறுவது, நீர்க்கடுப்பு என்று எந்தத் தொந்தரவும் இல்லாமல் சிறுநீர் இயல்பாக வெளியேற வேண்டும்.**

கோடை ஆரம்பித்துவிட்டது. கோடையில் மேற்கொள்ள வேண்டிய உடல்நல பாதுகாப்பு நடவடிக்கைகளில் முக்கியமானது, உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் அருந்துவது. எவ்வளவு தண்ணீர் அருந்த வேண்டும், எப்படி அருந்த வேண்டும் உள்ளிட்ட அறிவுரைகளை வழங்குகிறார், சிவகங்கையைச் சேர்ந்த அரசு மருத்துவர் ஃபரூக் அப்துல்லா.

தண்ணீரைப் பொறுத்தவரை கோடைக்காலம், பனிக்காலம் எனப் பருவநிலை எதுவாக இருந்தாலும், எப்போதுமே உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் பருகுவது அவசியம்.

ஒவ்வொருவரின் வாழ்க்கை முறை, உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்து, அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய தண்ணீரின் அளவு மாறுபடும். உதாரணமாக, அதிக உடற்பயிற்சிகளில் ஈடுபவர்களுக்கு அதிகமாக வியர்வை வெளியேறும் என்பதால், அதை ஈடுகட்டும் அளவுக்கு அவர்கள் தண்ணீர் பருக வேண்டும். சிறுநீரகம் உள்ளிட்ட உடல் பிரச்சினைகள் உள்ளவர்கள், தங்களுக்கு மருத்துவர் பரிந்துரைக்கும் அளவே தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, ஒருவர் ஒரு நாளுக்குக் குறைந்த பட்சம் 3 - 4 லிற்றர் தண்ணீர் அருந்த வேண்டும்.

சிறுநீர் நிறமற்று, அல்லது வெளிர் மஞ்சள் நிறத்தில் வெளியேற வேண்டும். இவையெல்லாம், நீங்கள் உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் பருகுவதற்கான அறிகுறிகள்.

கோடையில் வெந்நீர் தவிர்த்து, குளிர்ந்த நீர் அல்லது அறை வெப்பநிலையில் உள்ள நீர் பருவகுவதே நல்லது. சைனஸ் உள்ளிட்ட பிரச்சினைகள் உள்ளவர்கள், இளம் சூட்டில் நீர் பருகலாம். கோடை ஆரம்பித்தவுடனே, பலரும் ஃபிரிட்ஜில் தண்ணீர் வைத்துப் பருக ஆரம்பிப்பார்கள். ஆனால், வெளியில் சென்று வந்து, அந்த வியர்வை ஈரத்துடன் ஃபிரிட்ஜில் இருந்து தண்ணீர் எடுத்து 'சில்' என்று குடித்தால்... சளி, இருமல், தலைவலி போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம் என் பதால் ஃபிரிட்ஜ் வாட்ட ரைத் தவிர்க்க வேண்டும். மாறாக, ஃபிரிட்ஜில் வைத்த தண்ணீரை எடுத்து வெளியே வைத்து, அதன் அதீத ஐஸ் தன்மை வடிந்ததும், மிதமான குளிர்ச்சியில் குடிக்கலாம்" என்கிறார்.



கோடை என்றாலே, பல வீடு களிலும் மண் பானையில் தண்ணீர ஊற்றிப் பருக ஆரம் பித்துவிடுவார் கள்.

"மண் பானைத் தண் ணீரில் குளிர்ச்சி தாண்டி, ஆரோக்கியமும் இருக்கிறது"

"சித்த மருத் துவத்தில் மண் பானை 'பிருதிவி பூத அம்சம்' கொண்டது.


உடல் மற்றும் உடலின் உள் உறுப்புகளின் ஆரோக்கியத்துக்கு பிருதிவி பூதம் மிகவும் அவசியம். அதனால், மட்பாண்டப் பொருள்களைப் பயன்படுத்துவது உடலுக்கு நன்மை தரக்கூடியது. குறிப்பாக, களி மண்ணில் ஏராளமான கனிமச் சத்துகள் நிறைந்துள்ளன. கார்பன், பாஸ்பரஸ், ஹைட்ரஜன், நைட்ரஜன், பொட்டாசியம ஒக்சிஜன், மெக்னீசியம், கால்சியம், சல்பர், இரும்புச்சத்து, தாமிரம், துத்தநாகம், மாங்கனீசு, போரான், க்ளோரின், மாலிப்டினம், நிக்கல் போன்றவை களிமண்ணில் காணப்படுவதாக அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன?.

இவ்வளவு சத்துகள் நிறைந்துள்ள மண்பானைகளில் தண்ணீர் வைத்துப் பயன்படுத்தும்போதும், சமைக்கும்போதும், உள்ளே வெப்பம் ஒரே சீராக ஊடுருவும். இதன் காரணமாகத்தான், மட்பாண்டங்களில் சமைத்த உணவுகள் சுவை, மனம் மாறாமல், நீண்டநேரம் கெடாமல் இருக்கும்.

மட்பாண்டங்களில் வைக்கப்படும் உணவுப்பொருள்களால், உடல் குளிர்ச்சி அடையும். உடலின் வளர்சிதை மாற்றம் ஒழுங்குபடுத்தப்படும். உடலில் ஏற்படும் அமிலத்தன்மை மாறுபாடு சரிசெய்யப்படும்.

நல்ல செரிமானத்தைக் கொடுத்து, பசியைத் தூண்டும். வயிற்றுப் புண்கள் ஏற்படாமல் தடுக்கும். அதனால் கோடை என்றில்லாமல் எப்போதுமே மண்பானை, மண்பாண்டம் பயன்படுத்தலாம்" என்கிறார்.

**மண்பானை தருமே நல வாழ்வு!**



# உத்தம வில்லன் விளாடிமிர் புடின்

ரஷ்யத் தேர்தலில் விளாடிமிர் புடின் வெற்றி பெறுவார் என்பது ரஷ்யச் சூழலை அறிந்த யாருக்கும் வியப்பாக இருக்காது. ஆனால், 87.97 சதவிகித வாக்குகளை அந்த நாட்டு மக்கள் அவருக்கு அளித்தது பலரும் எதிர்பாராதது. இதன்மூலம் 71 வயது புடின் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு ரஷ்யாவின் அதிபராக நீடிப்பதை யாராலும் தடுக்க முடியாது. கடந்த 200 ஆண்டுகளில் ரஷ்யாவை நீண்ட காலம் தன் இரும்புப்பிடிக்குள் வைத்திருக்கும் தலைவராக அவர் வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறார். கடந்த 99ஆம் ஆண்டு புடின் முதல்முறையாகப் பிரதமர் ஆனார். அன்றுமுதல் அவரின் செல்வாக்கை யாராலும் அசைக்க முடியவில்லை. 'இது ஜனநாயக முறையில் நடைபெற்ற தேர்தல் இல்லை" என்று அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி போன்ற சில நாடுகள் விமர்சித்துள்ளன. சீனா, வட கொரியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் புடினுக்கு வாழ்த்து தெரிவித்திருக்கிறார்கள், இந்தியப் பிரதமரும்தான்!

ஜனநாயக நாடுகள் உண்டு, சர்வாதிகார நாடுகள் உண்டு. ஜனநாயகமாக இருப்பது போல தோற்றம் காட்டிக்கொள்ளும் சர்வாதிகாரிகள் மூன்றாவது ரகம். புடின் அந்த ரகம். தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்காக அவர் செய்தவை கொஞ்சநஞ்ச வேலைகள் இல்லை. ஒருவர் இரண்டு முறைக்கு மேல் ரஷ்யாவின் அதிபர் பதவியை வகிக்க முடியாது. இந்தச் சட்டம் தனக்குத் தொல்லையாக இருக்கிறது என்று அரசியலமைப்பையே திருத்திவிட்டார் புடின்.

கிட்டத்தட்ட எதிர்க்கட்சிகளே இல்லாமல் நடந்த தேர்தல் இது என்று சொல்லலாம். புடினின் கடுமையான அரசியல் எதிரியான அலெக்ஸி நவால்னி இரு வருடங்களுக்கு முன் சிறையில் அடைக்கப்பட்டு சமீபத்தில் மர்மமான முறையில் இறந்தார். சமீபத்தில்கூட ரஷ்யாவுக்கு ஆதரவாக உக்ரைனில் போர் செய்துவரும் கூலிப் படையான வேக்னர் குழுவின் தலைவர் பிரிகோசின் என்பவர் புடினுக்கு எதிராகக் கலகம் செய்தார். அந்த நேரத்தில், 'வேக்னர் படைகள் வேகமாகச் சென்று மாஸ்கோவைக் கைப்பற்றிவிடும். புடின் ஆட்சியை அவர்கள் தகர்த்துவிடுவார்கள். ரஷ்யா இனி அவ்வளவுதான் என்றெல்லாம் மேற்கததேய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால், கடைசியில் பிரிகோசின் சரணடைந்து வெளிநாடு தப்பியோட நேர்ந்தது. இரண்டே மாதங்களில் ஒரு விமான விபத்தில் மர்மமான முறையில் இறந்து போனார் பிரிகோசின். புடினை எதிர்க்கும் பலருக்கும் இப்படித்தான் ஆகிறது.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் புடினுக்கு சாதகமாக பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து எந்த விமர்சனமும் தேர்தல் பரப்புரையில் இருக்கக்கூடாது என்று சட்டமே இயற்றப்பட்டது. கிட்டத்தட்ட தன்னை எதிர்த்து யார் யார் நிற்க வேண்டும் என்பதையே புடின் தீர்மானித்தது போலத் தெரிந்தது. ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிகோலாய் கரிடனோவ் இரண்டாம் இடம் பிடித்தார். அவர் வாங்கியது 4.7% ஓட்டுகள். தோற்றத்துக்கு அது எதிர்க்கட்சிபோலத் தெரிந்தாலும், புடினின் யுனைடெட் ரஷ்யா கட்சிக்கும் இந்தக் கட்சிக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. விலாடிஸ்லாவ் டவன்கோவ், லியோனிட் ஸ்லட்ஸ்கி என போட்டியில் இருந்த மற்ற இருவரும்கூட அப்படி ஒன்றும் புடினை எதிர்ப்பவர்கள் கிடையாது.

புடினின் உடல்நிலை குறித்து கடந்த இரண்டு மூன்று வருடங்களாகவே பல 'தகவல்கள்' பரவிக்கொண்டிருந்தன. அவர் ரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அதற்காக புடினுக்கு முதுகுப்பகுதியில் அறுவை சிகிச்சை நடந்ததாகவும் கூறப்பட்டது. தன்னைப் போலவே இருக்கும் வேறு ஒருவரை பல நிகழ்ச்சிகளுக்குப் புடின் அனுப்புவதாகவும், அவர் உடல்நலமற்று எங்கோ படுக்கையில் கிடப்பதாகவும்கூட தகவல்கள் பரப்பப்பட்டன. இந்த எல்லாவற்றையும் தாண்டி அவர் தேர்தலில் ஜெயித்திருக்கிறார்.

டம்மியாக சில வேட்பாளர்களைத் தனக்கு எதிராக நிறுத்தினாலும புடினுக்கே ஏன் ரஷ்ய மக்கள் வாக்களிக்கிறார்கள்? இன்றுவரை அவர் ரஷ்ய மக்களின் அபிமானத்தைப் பெற்றவராக இருக்கிறார். 1990 களில் சோவியத் யூனியன் உடைந்தபோது இழந்த ரஷ்யாவின் பெருமையை மீண்டும் நிலைநிறுத்தியவர் அவர் என்ற பிம்பம் மக்களிடம் அழுத்தமாகப் பரவியிருக்கிறது. 2014ஆம் ஆண்டில் உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரீமியாவை ரஷ்யாவின் பிடிக்குள் புடின் கொண்டு வந்ததில் ரஷ்ய மக்களில் பலருக்கும் உடன்பாடு உண்டு. கிரீமியாவில் வசிக்கும் பலரும் ரஷ்யர்கள் என்பதால், அந்தப் பகுதி தங்களுக்குச் சொந்தமானது என்ற எண்ணம் கொண்டவர்கள் ரஷ்யர்கள். இப்போது உக்ரைன் போரால் ரஷ்யாவில் பொருளாதார நெருக்கடி வந்தாலும், புடினை மக்கள் ஆதரிக்கிறார்கள். இதன்மூலம் உக்ரைன் மீது போர் தொடுத்தது நியாயமே என்று புடின் நம்பக்கூடும். தேர்தல்கள் இப்படித்தான் பல சர்வாதிகாரிகளின் தவறுகளை நியாயப்படுத்துகின்றன.

"உக்ரைனில் ரஷ்யா வசப்படுத்திய பகுதிகளில் வசிப்பவர்கள் ரஷ்ய பாஸ்போர்ட்களை உடனே பெற வேண்டும். இல்லையென்றால் அவர்கள் வெளிநாட்டுக் குடிமக்களாகக் கருதப்பட்டு விரைவில் துரத்தப்படுவார்கள்" என்று விளாடிமிர் புடின் அறிவித்திருக்கிறார். இதை ஐரோப்பிய அமைப்புகள் கடுமையாக எதிர்க்கின்றன. ஆனால், எதுவும் புடினின் வெற்றியை அசைத்துப் பார்க்கவில்லை. உலக அரங்கில் என்ன விமர்சனங்கள் எழுந்தாலும் உள்நாட்டில் தான் ஹீரோதான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார் புடின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## வென்றிட வேண்டும்

தர்மநீதி என்று கூறி
வாழும் வாழ்விலே-துயர்
என்றும் வந்து சேர்ந்திடாது
இன்பம் சேருமே -மனிதம்
பேணி வாழும்போது...
துன்பம் விலகுமே -இனிமை
என்றும் கண்டு வாழ நேரின்
துன்பம் அழியுமே

சிந்தனைக்கு சிறகு கட்டி
வாழ்ந்திட வேண்டும்-புவி
வாழும் வாழ்வில் இன்பம்
நாளும் உழைத்திடு-தரையில்
வீழ்ந்த மனிதம் உயர எண்ணி
வாழும் வாழ்வு மேல்-என்றும்
காணும் காட்சி யாவுமிங்கு
வென்றிட வேண்டும்

சத்தியத்தை நம்பி வாழ்ந்த
வாழ்வியல் கண்டோம்-மனிதம்
இனிமை காண வாழும் போது
தோல்வி இல்லையே-என்றும்
உண்மை பேசி வாழும் போது
வாய்மை வென்றிடும் - மண்ணில்
சத்தியமே வென்று வாழின்
துயர்கள் விலகிடும்

**வளவை வளவன்.**




## ஏய்ப்போரை ஏமாற்று

பிரச்சினைகள் பலவற்றோடு
வாழ்வின் தேவைகளை
பூர்த்தி செய்ய சிரமம் மிகவுற்று
மெலிவு கொள்ளும் மக்காள்
நிமிருங்கள் விழிப்புடனே!
வீறு கொள்ள வைத்தும்மை
உசுப்பேற்றியோர் வருகின்றனர்
உம் உழைப்பை சுரண்டி
ஊழல் செய்துயர்ந்தோர்
உத்தமராய் காட்சி தருகின்றனர்
பிரச்சினைக்கு காரணரே
பிரச்சினையை தீர்ப்பதாய்
பொய்க் கதையளக்கிறார்
வறுமையில் வாடுமுமக்கு வாரிடும்
வள்ளலாய் காட்சி தருவர்
ஊர் வந்தும் வாசல் வராதோர்
ஓரினமென்று அணைத்திடவருவர்
இவை எதற்கெனத் தெரியுமா?
இது தேர்தல் திருவிழா காலமன்றோ!
வாக்குகளை அபகரிக்க வேண்டுமே!
ஆதலால் உசாராகுங்கள்
ஏமாறுவதை விடுத்து
அற்பருக்கு வசப்படாதீர்...
ஏய்த்துப் பிழைப்போர் தொலைய
அவர்க்குப் பாடம் புகட்டுங்கள்.

**சி.இ.அன்புதுரை**
**சம்மட்டி ஓலை, மானிப்பாய்.**

## மௌனத்தின் தேடல்-712



### முயன்றால் முடியும்

உழைக்கும் எண்ணம்
மனதில் உறுதியாகிவிட்டால்
முதுமைக் காலத்தில் கூட
மூடை ஒரு சுமையாகாது
இளைஞர்களுக்கு
இவர் ஒரு எடுத்துக் காட்டு
வருங்காலச் சந்ததிக்கு
இவரைப் படம் போட்டுக் காட்டு

**துணவியூர் நடா.**

### உழைக்கும் கரங்கள்

நிலையாத உலகில்
நிலைக்குமென்ற நினைவில்
செப்படி வித்தைகள்
செய்தேனும் கோடிகளால்
மாடிகள் கட்டும்
உலகில் கள்ளம் கபடமிலா
மனோதிடத்துடன்
மூட்டை சுமக்கும்-இவ்
அண்ணலும் ஓர்
உன்னதமான உழைப்பாளியே.

**சி.மகாலட்சுமி, கொக்குவில்.**

### சாதனை

வரிச்சுமை என்னை என்ன செய்யும்?
பொதிச் சுமை எனக்கு சோறு போடும்
சுமைகள் எதுவானாலும் தாங்கிக்
கொள்ளும் வலிமை எனக்குள்ளது
எனது முதுகோ கேள்விக்குறியாகாது
வலிமைமிக்க தோள்களுடன்
நூறிலும் சாதனை படைப்பேன்

**சி.லோட்டஸ்லோறெஸ்,**
**யா/யூனியன் கல்லூரி.(மாணவி)**

### சுமை சுமந்த தோள்கள்

காலத்தின் கோலத்தில்
வாலிபம் மறைந்து
நரையும் திரையும்
தோன்றிய போதும்
சுமை சுமந்த தோள்கள்
சும்மாவா இருக்கும்?

**பி.மதுஷ்சன், தையிட்டி.**

### நானுமோர் வழிப்போக்கன்

ஆல விருட்சமாய்
பல விழுதுகளை
பேறாய் பெற்றாலும்...
இழந்த துணைவியின்
நினைவுகள் வாட்டிட...
ஊனுக்குள் வலித்தபடி
காற்றைப் பருகும்
பட்டினி வயிற்றுக்காய்
முதுமையிலும் சுமை தாங்கி

**செலன்,**
**ஓட்டுமடம்.**

### சிட்சை

பாமரனுக்கு சுமை ஒன்றும்
புதிதுமல்ல பெரிதுமல்ல
சுமையும் அவனைச் சுமக்கும்!
இறைவன் அவனுக்கு
அளந்து கொடுத்த
சுமை தான் இது!
இந்த சிட்சையை அவன்
ஏற்றுக் கொண்டால்!
அவன் வாழ்வு பரிபூரணமடையும்

**சிவரூபன்-ஜெனிஃபர், ஐந்தலை தெற்கு.**
**மயிலங்காடு.**

### சுமைதாங்கி

வாழ்க்கை எனும் ஓடத்தை ஓட்டிச் செல்ல
வாழ்நாள் எல்லாம் சுமைதூக்கி
சுமைதாங்கியாய் நிற்பது தான் உன் நிலையா?
வயோதிப காலத்திலும் ஓய்வுபெற
வழி தெரியாமல் தவிப்பதன் பரிதாபத்தை
முதலாளித்துவம் எனும் முதலைகள் உணராதவரை
மூட்டை தூக்கும் தொழிலாளியின் நிலை இது தான்

**ஆ.செல்வி,திருநாவலூர்.**

## மௌனத்தின் தேடல்- 713



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




07 செங்கை ஆழியான்

எனினும் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை 1625 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 150 பறங்கி வீரர்களைக் கொண்ட மூன்று பட்டாளங்கள் இருந்தன. ஒவ்வொரு வீரனுக்கும் அவன் கலியாணமாகாதவனாயிருந்தால் மாதம் ஒன்றுக்கு பன்னிரண்டு பணமும், கலியாணமானவனாயிருந்தால் மாதமொன்றுக்கு 24 பணமும் வழங்கப்பட்டன. அவசியமான காலங்களில் தேவைப்படும் உணவுப்பொருட்கள் கோட்டைக்குள் வேண்டியமட்டும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டன. கோட்டைக்குள் எப்போதும் 300 கண்டி நெல்லும் அரிசியும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

அறுவடைக்காலங்களில் சேமிக்கப்பட்டு வருட முடிவில் விற்கப்பட்டு, பின் புது நெல் அரிசியும் வாங்கி வைக்கப்பட்டன. அவ்வாறு சேமித்து வைப்பதற்குப் பந்தாயம் எனப்படும் நெற்கூடைகளைப் பயன்படுத்தினர். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளில் கோட்டைகளைக் கட்டியுள்ளனர். ஊர் காவற்றுறை (ஹெமன் ஹீல), காங்கேசன்துறை, பருத்தித்துறை, வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, ஆனையிறவு முதலான பகுதிகளிலும் இவர்கள் கோட்டைகளை அமைத்தனர். ஆனால் இவை யாழ்ப்பாணக் கோட்டை போன்று பெரியனவல்ல. பிலித் தே ஒலிவேறா நல்லூரை விட்டகன்று கோட்டை மாளிகைக்குள் தனது படையினரோடும், பரிவாரத்தோடும் குடியமர்ந்தான். கோட்டைக்குக் கிழக்கே பரந்து கிடந்த நிலத்தைத் தழிழ்க் கத்தோலிக்கர்களுக்கும் பறங்கியருக்கும் பகிர்ந்து கொடுத்தான். கோட்டை கட்டி எஞ்சிய கற்களைப் பயன்படுத்திப் புதியதொரு நகரம் அங்குருவானது.

சீசாரி என அந்நகரத்தைப் போர்த்துக்கேயர் அழைத்தனர். நல்லூர் மக்கள் அதனைப் பறங்கித்தெரு என்றழைத்தனர். அச்சீதாரியில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த கண்ணாடிப் பாதிரியார் என்றழைக்கப்பட்ட பேதுரு தே பெற்றன்சோ என்பவர் பெற்றி மாதா கோயிலை (அற்புத மாதா கோயிலைக்) கட்டி முடித்தார். அவ்விடத்திலிருந்து முஸ்லீம் பள்ளிவாசலைத் தீக்கிரையாக்கிவிட்ட, இத்தேவாலயத்தைக் கண்ணாடிப் பாதிரியார் கட்டியமைத்தார். யாழ்ப்பாணப் பட்டினத்தின் தேசாதிபதி கப்பித்தான் மேஜர் சில வேளைகளில் கோட்டைக்குள்ளிருந்து பரிவாரங்களுடன் சீதாரிக்கு வருவான். 80 லாஸ்கரின் வீரர்கள் அணிவகுத்து முன்னும் பின்னும் நடந்துவர 4 ஆராய்ச்சிமார் மெய்க்காப்பாளராக இருபுறமம் வர ஒலிவேறா குதிரையிற் பவனி வருவான்.

(தொடரும்...)

# கடல் புறா

## வணங்காத தலை! இணங்காத குரல்!




பெட்டிகளுக்குள் அடைபட்டிருந்த செல்வம் அவர்களுடைய எண்ணத்தில் பெரும் புரட்சியை விளைவித்தது. முதல் நாள் நிகழ்ச்சிகளையும், கடற்கரைச் சாலைச் சம்பவங்களையும் அவர்கள் அடியோடு மறந்தார்கள்.பதக்குகளை மறந்தார்கள். பயத்தையும் மறந்தார்கள். பெட்டிகளில் அடங்கிய பெரும் பொருள், பேராசை பிடித்த கொள்ளையர் மனத்தில் வேறெந்த உணர்ச்சியும் நில்லாது விரட்டிவிடவே பெரும் கூச்சலுடன் அவர்கள் அந்தப் பெட்டிகளைத் தொடர்ந்து சென்றார்கள்.

தன்னையும் பெட்டிகளையும் கொள்ளையர் தொடர்ந்து வருவதைக் கவனித்தும் கவனிக்காதவன் போலவே வெகு வேகமாக நடந்து சென்ற படைத்தலைவன் கோட்டைக்குள் நுழைந்து பலவர்மன் மாளிகையின் முன்புறத்தை அடைந்தான். மாளிகைகைய அவன் அடையுமுன்பே அவனைத் தொடர்ந்து வந்த கூட்டம் அளவுக்கு மீறிப் பெருகிவிட்டது. கூட வந்த கொள்ளையருடன் அக்ஷயமுனை நகரவாசிகளும் கூடிக்கொண்டதால் இளையபல்லவனைத் தொடர்ந்து பெரும் புரட்சிக் கூட்டம் வருவதைப் போலிருந்ததை மாளிகைச் சாளரத்தின் மூலம் கவனித்த பலவர்மன் ஓரளவு சினத்துக்கும், பயத்துக்கும், குழப்பத்துக்கும் உள்ளானான். அந்தக் குழப்பம், பயம், சினம் இவற்றுடன் திடுதிடுவென்று மாளிகை வாயிலை அடைந்த பலவர்மன் அங்கிருந்த நிலைமையைக் கவனித்தான்.

நிலைமை தனக்கெதிராப் பெரிதும் உருவெடுத்து விட்டதாகப் புரிந்துகொண்டதால் மிகவும் கலங்கவும் செய்தான். கூரிய அறிவு படைத்த பலவர்மன், இளை பல்லவன் எந்த யோசனையுடன் பெட்டிகளைக் கொண்டு வந்திருக்கிறானென்பதைப் புரிந்து கொண்டதால் உள்ளூரத் திகிலும் அடைந்தான். அந்தத் திகிலை உச்ச நிலைக்குக் கொண்டு செல்லும் ஒரு நூதனப் பணியில் அடுத்த விநாடி இறங்கினான் இளையபல்லவன். அந்தப் பணி பலவர்மன் திட்டங்களை, விநாடி நேரத்தில் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்தது. இளையபல்லவனின் பிடியில் தான் பலமாகச் சிக்கிக் கொண்டு விட்டதை உணர்ந்த பலவர்மன், இளையபல்லவனைச் சுடும் விழிகளால் நோக்கினான். இளையபல்லவன் முகத்தில் எந்தவிதக் கலவரமோகுழப்பமோ இல்லை. அவன் உதடுகளில் இகழ்ச்சிப் புன்முறுவல் தவழ்ந்து கிடந்தது. தங்கள் அடிமையின் காணிக்கை இதோ என்று மரப்பெட்டிகளைச் சுட்டிச் காட்டிய அவன் சொற்களிலும் இந்த இகழ்ச்சி பூரணமாக மண்டிக் கிடந்தது.

பலவர்மன் கண்ணெதிரே அந்த ஆறு பெட்டிகளில் ஒன்று பெரிதாகக் காட்சியளித்தது. அது நிதிப் பெட்டியா

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?

அல்லது தன்னைக் கவிழ்க்க வந்த சதிப்பெட்டியா என்று ஊகிக்க முடியவில்லை பலவர்மனுக்கு.

வெளியே பெரும் புரட்சிக்கூட்டம் போல் வந்து கொண்டிருந்த கொள்ளையர் குழாத்தையும் நகர மக்கள் கும்பலையும் இளையபல்லவன் தனது மாலுமிகள் தலையில் தூக்கி வந்த ஆறு பெட்டிகளையும் மாளிகைச் சாளரத்தின் மூலமே கவனித்து விட்டதால் வெகுவேகமாக மாளிகைவாயிலை அடைந்த அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவனான பலவர்மன் தன் காலடியில் இறக்கப்பட்ட அந்த ஆறு பெட்டிகளும் பெரும் நிதிப் பெட்டிகளென்பதை அறிந்ததும் தனது திட்டங்கள் அனைத்தையும் இளையபல்லவன் சுக்கல் சுக்கல்கலாக உடைத்தெறிந்து விட்டதை உணர்ந்து அந்த ஆறும் நிதிப்பெட்டிகளா அல்லது தன்னைக் கவிழ்க்க வந்த சதிப் பெட்டிகளா என்பதை அறிய முடியாமல் கலங்கினானென்றால், அதற்கக் காரணம் இருக்கத்தான் செய்தது. அந்தக் காரணத்தின் ஆரம்பப்பலனும் உடனே கிடைக்கும்படியான செயலில் இளையபல்லவனும் அடுத்த விநாடி இறங்கி விடவே தன்னை விட் பல மடங்கு அதிகப் புத்திக்கூர்மையும் தந்திரமும் படைத்த மனிதனைத் தான் சமாளிக்க வேண்டிய அவசியத்தைப் புரிந்து கொண்ட பலவர்மன், உள்ளூரக் கலங்கினாலும், உணர்ச்சிகளை அடக்கிக் கொள்வதில் பெரும் திறமை படைத்தவனாதலால் முகத்தில் ஓரளவு மகிழ்ச்சிக் குறியையே சில விநாடிகளுக்குள் தவழவிட்டுக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

396

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஆரோக்கியம் தேடி சில கேள்வி பதில்கள்


**நோய்கள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? எத்தகைய நோயாளர்கள் அதிகமாக மருத்துவமனைக்கு வருகிறார்கள்?**

எமது இயற்கைச் சூழல் பல்வேறு காரணிகளாலும் சத்தத்தாலும் அசுத்தமாவதும் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையுமே பல நோய்களுக்கு அடிப்படை காரணமாக விளங்குகிறது. இதன் காரணமாக மாரடைப்பு, பாரிசவாதம், உயர் குருதி அமுக்கம், புற்று நோய்கள் பல்வேறுபட்ட தொற்று நோய்கள், குடிவகை பாவனையால் ஏற்படும் ஈரல் நோய்கள், வளிமண்டலம் அசுத்தம் அடைவதால் ஏற்படும் நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மன அழுத்தத்தினால் ஏற்படும் நோய்கள், நீரிழிவு, உடற்பருமன் அதிகரிப்பு போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. இந்த நோய்களுக்கு ஆட்பட்டவர்களே அதிகமாக மருத்துவமனைக்கு வருகிறார்கள்.

**தொற்று நோய்களை விட தொற்றா நோய்களின் தாக்கமே அதிகரித்து வருகிறது என்று கருதப்படுகிறது. இதற்கு காரணம் என்ன?**

முன்னைய காலங்களிலே தொற்று நோய்களான அம்மை, பிளேக், போலியோ, கசரோகம், ஏற்புவலி, வாந்திபேதி போன்ற கொடிய தொற்று நோய்களால் பாரிய தாக்கங்களும் அதிகளவு இறப்புக்களும் ஏற்பட்டு வந்தன. மருத்துவத்துறையின் வளர்ச்சி காரணமாக பல தொற்று நோய்களின் பரம்பல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு இருக்கின்றது.

ஆனால் துரதிஷ்ட வசமாக சூழல் மாசடைவதாலும் மக்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டு போனதாலும், தொற்றா நோய்களான இருதய நோய், அதிகரித்த கொலஸ்ரோல், நீரிழிவு, பாரிசவாதம், புற்று நோய்கள், நுரையீரல் நோய்கள் போன்றவை அண்மைக் காலமாக பெரிதளவில் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாகவே சுகாதாரத்துறையினரின் கவனம் தற்பொழுது தொற்றா நோய்களின் கட்டுப்பாட்டை நோக்கி திரும்பி இருக்கிறது.



**எமது தலைமுறையினர் ஒப்பீட்டளவில் எமது முந்திய தலைமுறையிலும் பார்க்க அடிக்கடி நோய்வாய்ப்பட காரணம் என்ன? இளம் வயதினர் பலர் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியிருப்பதன் காரணம் என்ன?**

இதற்கு பல காரணங்களைச் சொல்ல முடியும். இயற்கையின் கூர்பியல் தத்துவத்தின்படி இயற்கையின் தாக்கங்களிற்கு தாக்குப் பிடிக்கக் கூடிய உடல் வலிமையுள்ள உயிரினங்களே தப்பிப் பிழைத்து வாழும். மற்றவை தமது வாழ்க்கையின் ஆரம்ப பகுதியிலேயே இறந்துவிடும்.

முன்னைய காலத்திலே மருத்துவ வசதிகள் போதாமை காரணத்தால் உடல் வலிமை குறைந்த குழந்தைகள் சிறு வயதிலேயே இறப்பைச் சந்தித்தன. இவற்றிலிருந்து தப்பிப் பிழைத்த வலிமையான குழந்தைகள் ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழ்ந்தன. இவர்களையே நாம் அன்று சந்தித்தோம். ஆனால் தற்பொழுது மருத்துவ வசதிகள் முன்னேற்றம் கண்டிருப்பதால் ஆரோக்கியம் குறைவாக இருக்கும் குழந்தைகள் உட்பட ஏறத்தாழ அனைவரும் காப்பாற்றப்படுகிறார்கள்.

இதனால் இவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுவது இயற்கையே. அத்துடன் தற்போதைய சந்ததியினரின் ஆரோக்கியமற்ற உணவு முறையும் போதிய உடற்பயிற்சியின்மையும் கூட எமது சந்ததியினர் அடிக்கடி நோய்வாய்ப்பட காரணமாக அமைகிறது. எமது சந்ததியினர் உடலில் தோன்றும் இயற்கையான தாமாகவே மாறக் கூடிய அறிகுறிகளைக் கூட பெரிதுபடுத்தி நோயென்று கருதி மருந்து எடுக்க முற்படுகின்றனர். இதுவும் நோய்நிலைகள் அதிகரித்திருப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றது.

**போருக்குப் பின்னரான தற்போதைய நிலையில் சுகாதாரம் சம்பந்தமாக எதிர் நோக்கப்படும் சவால்கள் எவை?**

போர் ஓய்ந்திருந்தாலும் இதனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்பட்டுவருகின்ற உடல் உளத்தாக்கங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நோய்வாய்ப்பட்டு ஆள் உதவி இன்றித் தவிக்கும் முதியவர்கள் அதிகரித்துவரும் தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள், குடிவகைக்கும், போதைப்பொருளுக்கும் அடிமையாகும் இளையவர்கள் ஆதரவற்ற சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆட்படுதல், புதிதாக இங்கு அறிமுகமாகும் ஆரோக்கியமற்ற உணவு வகைகளின் தாக்கம், மனப்பதற்றம், மனஅழுத்தம் என்பவற்றினால் ஏற்படும் தாக்கங்கள், பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் உளத்தாக்கங்கள் எனப் பல சுகாதாரப் பிரச்சினைகள் தற்பொழுதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

**யோகாசனம் மற்றும் தியான முறைகள் நோய் நிலைக்கட்டுப்பாட்டில் எவ்வாறு பங்களிக்கின்றன?**

இயற்கை முறை நோய்த் தடுப்பு நோய்க்கட்டுப்பாடு என்பவற்றிற்கு யோகாசனமும் தியான வழிமுறைகளும் பெரிதும் உதவியாக இருக்கிறது. மனப்பதற்றத்தைக் குறைப்பதற்கு, தசை இறுக்கத்தைக் குறைப்பதற்கு, பல நோய்களைத் தடுப்பதற்கு நோவைக் குறைப்பதற்கு, குருதி அமுக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு என இதன் மருத்துவப் பயன்கள் பல. ஆனால் யோகாசனம் உடற்பயிற்சிக்கான மாற்றீடு என்ற தப்பான அபிப்பிராயம் ஒன்று நிலவுகிறது.

ஒவ்வொருவரும் உடற்பயிற்சிக்கு மேலதிகமாக யோகாசனம் செய்து வருவதே நல்லது. யோகாசனம் ஒழுங்காகச் செய்கிறோம் என்று கருதி வழமையான மருத்துவக் கண்காணிப்பு முறைகளையும் மருந்துகளையும் தன்னிச்சையாக நிறுத்திக்கொள்வது ஆபத்தானது.

Dr. சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் மலர்க் கண்காட்சி



(நுவரெலியா)

எழில் கொஞ்சும் நுவரெலியா நகரில் வசந்த காலத்தையொட்டி வருடம் தோறும் நடைபெறும் மலர்க்கண்காட்சி நுவரெலியா மாநாகரசபை ஏற்பாட்டில் விக்டோரியா பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட மலர்க்கண்காட்சி நேற்று சனிக்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏராளமான சுற்றுலாப்பயணிகள் ஆர்வமுடன் கண்டுகளித்து வருகின்றனர்.

ஏப்ரல் மாத வசந்த காலத்தில் ஒரு கட்டமாக வருடம் தோறும் குறித்த மலர்க் கண்காட்சி நடைபெறும்.

இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இம்மலர்க்கண்காட்சியில் விதவிதமான மலர்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட உருவ பொம்மைகள், மிருகங்களின் உருவம் காய் கறிகளின் உருவம் என பல வடிவங்களில் உருவ அலங்காரங்களும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. (நி-6)

# உலக அழகி போட்டியில் இலங்கைப் பெண் துஷாரி

(கொழும்பு)

அமெரிக்காவில் நடைபெறவுள்ள உலக அழகிப்போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக திருமதி துஷாரி ஜெயக்கொடி நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்.

உலகின் 33 நாடுகளைச் சேர்ந்த திருமணமான அழகுராணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டி இன்று முதல் 25 ஆம் திகதி வரை அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. திருமதி துஷாரி ஜெயக்கொடி அண்மையில் இலங்கையில் நடைபெற்ற திருமணமான அழகிப் போட்டியின் 50 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் போட்டியில் வெற்றி பெற்று இந்தப் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாயான இவர் மலேசிய விமானப் பணிப் பெண்ணாக கடமையாற்றி வருகின் றார். இந்நிலையில் உலக அழகிப் போட்டியில் பங்கேற்கவுள்ள துஷாரி ஜெயக்கொடிக்கு பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 80 | 100-130 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 140 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 | 100-120 | 150 |
| தக்காளி | 100 | 100 | 50 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 100-130 | 140 |
| கோவா | 180 | 160 | 140 | 250 | 300 |
| கரட் | 300 | 300 | 300 | 280 | 300 |
| பூசணி | 160 | 140 | 100 | 80-100 | 120 |
| புடோல் | 120 | 180 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 80-100 | 140 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 380 | 300 | 250 | 300 |
| பாகற்காய் | 250 | 300 | 200 | 300 | 300 |
| வெண்டக்காய் | 150 | 130 | 50 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | — | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 160 | 250 | 150 |
| லீக்ஸ் | 350 | 250 | 230 | 200 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 140 | 250 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 300 | 450-1000 | 800 |
| போஞ்சி | 200 | 300 | 250 | 270 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 | — | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 80 | 60-100 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 300 | 600-800 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 60-130 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | — | 350 |
| வெங்காயப்பூ | — | 200 | 300 | — | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 80 | 90 | 50 |
| வல்லாரை | 60 | 200 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | — | — | 120 | 90 | [illegible] |

# இன்று ஒரு தகவல் 101



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பறவைகள்

நாம் எல்லாம் புதிதாக ஒரு பட்டணத்திற்குப் போனால் ஒவ்வொரு இடத்திற்கும் வழி கேட்டுக் கொண்டே போவோம். விபரம் எல்லாம் குறித்து பையிலே வைத்துக்கொள்வோம். இப்படி எல்லாம் செய்தும் கூட கடைசியிலே! புறப்பட்ட இடத்திற்கு வழி தெரியாமல் ஒரு ஆட்டோவைப் பிடித்து திரும்பி வருகின்ற மாதிரி ஆகிவிடும்.

ஆனாலும் இந்த பறவைகள் இருக்கின்றதே அவைக்கெல்லாம் அபாரமான சாமர்த்தியம். யாரிடமும் வழி கேக்காமல் எவ்வளவோ தூரம் பறந்து போய் விடுகிறது...அதே மாதிரி புறப்பட்ட இடத்திற்கே திரும்பியும் வந்துவிடும்.

ஆகாயவிமானம் கூட தொடர்ந்து பறப்பது இல்லை... அடிக்கடி இறங்கி அதற்கு வேண்டியதை நிரப்பிக் கொண்டு தான் புறப்பட்டு போகும்.

ஆனால் சில பறவைகள் இடைவிடாமல் 24000 மைல் கூட பறந்து போய்விடுமாம். இதற்கெல்லாம் பெரிய கருவியோ, பெற்றோலோ தேவையில்லை! அதுபாட்டுக்கு போகிறது வருகிறது. அதுவும் வருடத்திற்கு இரண்டு தடவை கூட இப்படி போயிட்டு வருகின்றதாம்.

ஆர்க்டிக்டெர்ன் என்று ஒரு பறவை ஒவ்வொரு வருடமும் ரொம்ப தூரத்திலே உள்ள வடபகுதிக்கு போகின்றதாம். எதற்கு அவ்வளவு தூரத்திற்கு போகின்றது என்று நினைக்கிறீர்கள்? முட்டையிட்டு விட்டு வருவதற்குத்தான்! வேறு எதற்காகவுமில்லை. குளிர்காலம் ஆரம்பித்தவுடனே தெற்கே உள்ள கடற்பகுதிக்கு அவையெல்லாம் திரும்பி வந்துவிடுமாம்.

இவையெல்லாம் எவ்வளவு வேகத்திலே பறக்கின்றது என்று நினைக்கிறீர்கள்? ஜெட் விமானம் கூட தோற்றுப் போய்விடுமாம். அவ்வளவு வேகமாம்! தென் அமரிக்காவிலே இருந்து ஐரோப்பா 6000 மைல் தூரத்திலே இருக்கின்றது. சில பறவகைள் அங்கேயிருந்து இங்கே பறந்து வந்துவிட்டு மறுபடியும் இங்கே இருந்து அங்கே பறந்து போய் சரியாக அது ஏற்கனவே விட்டு விட்டு வந்த கூட்டிற்கே சரியாக போய் சேர்ந்து விடுகின்றதாம்.

கீஸ் என்னும் ஒருவகைப் பறவை. உள்ளங்கையிலே அடக்கி விடலாம் அது அவ்வளவு சிறியது. அது பாருங்கோ இமயமலைத் தொடருக்கு மேலே 26000 அடி உயரத்திலே பறந்து போகின்றதாம். அட்லாண்டிக் கடலுக்குகிட்டே பேய்க் காற்றெல்லாம் வீசுமாம். அதையெல்லாம் சமாளித்துக் கொண்டு அது பறந்து போகின்றதாம்.

மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது அல்லவா?

அது சரி இந்த பறவையெல்லாம் பறக்கிறது இருக்கட்டும்... இறக்கை இருக்கிறது பறக்கிறது! அதிலே ஆச்சரியமில்லை! ஆனால் எப்படி இவையெல்லாம் யாரிடமும் வழி கேக்காமல் அவ்வளவு தூரத்திற்குப் போயிட்டு வந்துவிடுகிறது. அது தான் ஆச்சரியம். அதை பற்றி எல்லாம் சில ஆராய்ச்சிகள் நடந்தது! தேனீ, டொல்பீன் இதற்கெல்லாம் இருக்கிற மாதிரியே புறா தலையிலேயும் மாக்னடைட் என்கிற பொருள் இருக்கின்றதாம்.

இது இருக்கின்றது கொஞ்சம் தான்! இருந்தாலும் இதனுடைய உதவியாலே உலகத்தோட வடதுருவம் எது? அப்படி என்பதை புறா தெரிந்து கொள்ள முடிகிறது.சில பறவைகள் இரவு நேரத்திலே பறந்து போவதில்லை அவையெல்லாம் நட்சத்திரத்தை பார்த்து திசையை கண்டுபிடித்துக்கொள்ளுமாம். விஞ்ஞானி கள் ஒரு சோதனை மூலம் கண்டுபிடித்து இருக்கின்றார்கள். கோளரங்கம் ஒன்று உருவாக்கி அதிலே செயற்கையாக சில நட்சத்திரத்தை உருவாக்கி னார்கள். எப்படி? அவையெல்லாம் இடம் மாறி–தவறான இடத்திலே இருக்கின்ற மாதிரி செய்தார்கள்.அதன் பிறகு சில பறவைகளை உள்ளே விட்டு இருக் கின்றார்கள்.

அவையெல்லாம் வழக்கமாக ஆபிரிக்காவிற்கு போக வேண்டிய பறவைகள். நட்சத்திரம் காட்டின திசையை தவறாக புரிந்து கொண்டு டோக்கியோ இருக்கின்ற திசையிலே பற்க்க ஆரம்பித்து விட்டதாம். இந்த பறவையெல்லாம் பறந்து போகின்ற தூரத்தை பார்த்தால் ஆச்சரியமாக இருக்கின்றது. அது பறந்து போவதற்கு ஆகின்ற நேரத்தை பார்த்தால் அதைவிட ஆச்சரியமாக இருக்கின்றது. 6000 மைல் போவதற்கு 17 நாட்கள் தான் ஆகின்றதாம்.

ஒரு மனிதனையே எந்தவிதமான கருவியோட உதவியும் இல்லாமல் ஒரு பாலைவனத்திலே நடக்க விடுகின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் நடக்க ஆரம்பித்தால் சுற்றி சுற்றி கடைசியிலே புறப்பட்ட இடத்திற்கே வந்து கொண்டு இருப்பான். ஆனால் பெண்குவின் பறவைகள் பாலைவனத்திலே 30 மைல் வரைக்கும் ஒரே நேர்கோட்டிலே போவதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கின்றார்கள். அதனாலே மனிதனுக்கே வழிகாட்டுகின்ற தகுதி பறவைகளுக்கு இருக்கு என்று சொன்னால் அதை ஒத்துக்கத்தான் வேண்டியிருக்கிறது. அந்தக்காலத்திலே தபால் அலுவலகம் இல்லாத நேரத்திலே கடிதங்களையெல்லாம் புறா காலிலே கட்டித்தான் அனுப்பி இருக்கின்றார்கள். அது சரியாகக் கடிதங்களை கொடுத்துவிட்டு வந்துவிடும்.

பூமியோட காந்த சக்தி ஒளி பரவியிருக்கின்ற விதம் ரொம்ப தூரத்திலே இருந்து மணத்தை நுகர்கின்ற சக்தி இவையெல்லாம் தான் அதற்குக் காரணம்.இந்தக் காலத்திலே எல்லாம் புறா காலிலே கடிதத்தை கட்டி அனுப்புவதிலே சில சங்கடம் இருக்கின்றது. சமீபத்திலே நான் படித்த ஜோக் ஒன்றை சொன்னால் அது என்ன சங்கடம் என்று புரிந்து கொள்வீர்கள். ஒரு தேசத்து ராஜா மந்திரியை பார்த்துக் கேட்கிறார். அமைச்சரே அந்நிய தேசத்திற்கு புறா மூலமாக ஓலை அனுப்பினோமே! பதில் வந்ததா?பதில் வந்தது மன்னா என்கிறார் அமைச்சர். என்னவென்று? என்றார் ராஜா. அந்த புறாவின் கறி ருசியாக இருந்தது என்று! என்றார் அமைச்சர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி வடகொரியா மீண்டும் ஏவுகணை பரிசோதனை


(பியாங்யாங்)

**அமெரிக்காவின் தொடர் எச்சரிக்கைகளையும் மீறி, தென் கொரியாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் வடகொரியா பல்வேறு ஏவுகணை பரிசோதனைகளை நிகழ்த்தி வருகிறது. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.**

இந்த நிலையில், வட கொரிய இராணுவம் புதிதாக 2 ஏவுகணை பரிசோதனைகளை நிகழ்த்தியுள்ளது.

இதன்படி வடகொரியாவில் உள்ள மேற்குக் கடல் பகுதியில், "ஹவாசால்-1 ரா-3" என்ற சக்தி வாய்ந்த ஏவுகணையையும், விமானத்தை தாக்கி அழிக்கும் "பியோல்ஜி-1-2" என்ற ஏவுகணையையும் நேற்று முன்தினம் வடகொரியா பரிசோதனை செய்துள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப போர்க்கருவிகளில் தொழில் நுட்பங்களை புகுத்தும் நடைமுறையின் ஒரு பகுதியாக இந்த இரு சோதனைகளும் நிகழ்த்தப்பட்டிருப்பதாக வட கொரிய அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-6)



# பாகிஸ்தானில் கொட்டித் தீர்க்கும் கனமழை இதுவரை 87 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் இது வரை 87 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 82 பேர் காயமடைந்துள்ளதாகவும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், கட்டுமான இடிபாடுகள், மின்னல் தாக்குதல் மற்றும் திடீர் வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் பெரும்பாலான மக்கள் இறந்ததாகவும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. (நி-6)

# வெடிகுண்டுகளுடன் ஈரான் தூதரகத்தினுள் நுழைந்த மர்ம நபர் பிரான்சில் பரபரப்பு

(பாரிஸ்)

பிரான்சிலுள்ள ஈரான் தூதரகத்தில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தவிருப்பதாக எச்சரிக்கை விடுத்த நபர் ஒருவர் பாரிஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கையெறி குண்டுகள் மற்றும் வெடிகுண்டுகளுடன் ஜாக்கெட் அணிந்த ஒருவர் ஈரான் தூதரகத்திற்குள் நுழைந்து தன்னை தானே வெடிக்கச் செய்யப்போவதாக மிரட்டியுள்ளார்.

அதனை தொடர்ந்து, ஈரான் துணைத்தூதரகத்தை சுற்றியும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு பாதுகாப்பு படையினரும் குவிக்கப்பட்டதுடன் குறித்த சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சந்தேகநபர் தீவிரவாத தாக்குதலுக்கு முயன்றாரா? அல்லது வேறு காரணத்திற்காக இப்படி நடந்து கொண்டாரா? என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்தோடு, தூதரகத்தின் பாதுகாப்பிற்காக அப்பகுதியில் உள்ள மெட்ரோ பாதைகள் தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றங்களுக்கு மத்தியில் இந்த சம்பவம் பிரான்சில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி-6)

# ஜப்பானில் குறைவடையும் மக்கள் தொகை

(டோக்கியோ)

மக்கள்தொகை குறைவால் ஜப்பானில் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.ஜப்பானின் தற்போதைய 124.35 மில்லியன் மக்கள் தொகை 13 ஆண்டுகளாக குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

நாட்டின் தொழிலாளர் எண்ணிக்கை 2022 முதல் 2040 வரை தொடர்ந்து 12 வீதம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அந்த நேரத்தில் நாட்டில் 11 மில்லியன் தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆசியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார . உலகிலேயே அதிக வயதான மக்கள் தொகை கொண்ட மற்றும் உலகிலேயே மிகக் குறைந்த பிறப்பு விகிதம் கொண்ட நாடு ஜப்பான் ஆகும். இந்நிலையில் , கடந்த வருடம் 758,631 குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ள தாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் லீக்கின் அனுமதியுடன் ஏ.எல் விளையாட்டு கழகமும், ஏ.எல் இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

40 வயதிற்கு மேற்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் சென்லூட்ஸ் அணியை எதிர்த்து எவ்.சி. விளையாட்டுக் கழகமும், 4.15 மணிக்கு ஏ.எல். கிண்ணத்திற்கான இறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து இளவாலை சென்லூட்ஸ் அணியும் மோதவுள்ளன.

ஏ.எல். விளையாட்டு கழகத் தலைவர் செ.டிக்சிக்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் இ.யுகராஜ் மற்றும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் மா.நவநீதமணி, வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் பா.முகுந்தன், யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் ஏ.சுரேந்திரன், அராலி கிழக்கு கிராம சேவையாளர் திருமதி கா.திவ்யா, சங்கானை இளைஞர் சேவை அதிகாரி ப.மதன்ராஜ், அராலி கிழக்கு அம்பாள் சனசமூக நிலைய தலைவர் அ.அமிர்தராஜ், வட்டு மத்திய கல்லூரி ஆசிரியர் ந.செல்வகுமார், அறக்கட்டளை இணைப்பாளர் சந்திரன் தனேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-90)

# சம்பியனான உடுவில் அம்பாள்




(கரணவாய்)

**இறுதியாட்டத்தில் மாலை சந்தை மைக்கல் அணியை வீழ்த்தி உடுவில் அம்பாள் அணி சம்பியனானது.**

வரணி மதிஒளி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தியிருந்தது. 32 கழக அணிகள் பங்குபற்றியிருந்தன. இவ் சுற்றுப் போட்டியில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி பராசக்தி அணியை வீழ்த்தி மாலை சந்தை மைக்கல் அணியும் யூ - கே அணியை வீழ்த்தி உடுவில் அம்பாள் அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தன.

இறுதியாட்டத்தில் மாலை சந்தை மைக்கல் அணியை எதிர்த்து யூ.கே. அணியும் மோதின. பரபரப்பாக இறுதி நொடி வரை இடம் பெற்ற போட்டியில் 6:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் மாலை சந்தை மைக்கல் அணியை வீழ்த்தி உடுவில் அம்பாள் அணி சம்பியனாகியது.

முதலாவது இடத்தைப் பெற்ற உடுவில் அம்பாள் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் ரூபா 20,000 பணப்பரிசும் இரண்டாம் இடத்தை பெற்ற மாலை சந்தை மைக்கல் அணிக்கு வெற்றிக்கேடயமும் ரூபா 15000 பணப்பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இவ் இறுதிப் போட்டியில் சிறந்த வீரராக மைக்கல் அணியின் வீரர் கோகுலன் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல்கள் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

வடக்கு மாகாணத்தின் சமகால நிலைமை மோசமாகி வருவது குறித்து பல தடவைகள் இவ்விடத்தில் பிரஸ்தாபித்து விட்டோம். இருந்தும் அதுபற்றி எவரும் கருசனை கொள்வதாகத் தெரியவில்லை.

எனவே உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், அது தொடர்பில் மாற்றுவழியைத் தேட வேண்டியது பொதுமக்களின் பொறுப்பு.

உதாரணத்துக்கு எங்கள் மண்ணில் நீண்டு செல்கின்ற வாகன விபத்துக்களால் அருமந்த உயிர்கள் பலியாகிப் போகின்றன.

வாகன விபத்து ஏற்பட்டதும் போக்குவரத்துப் பொலிஸார் அவ்விடத்துக்கு வருவதும் அளவுகள் செய்வதும் முறைப்பாடு எழுதுவதுமான சட்டரீதியான நடவடிக்கைகள் நடக்கின்றனவே தவிர, அதனூடு விபத்துக்கள் குறைந்ததா? என்றால், அறவே இல்லை என்பது தான் பதிலாக இருக்கும்.

இங்குதான் வாகன விபத்தில் உயிரிழப்பு ஏற்படும்போது, விபத்தை யார் ஏற்படுத்தினாரோ அவர் தொடர்பில் பொதுமக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு ஆளாகின்றனர்.

சில இடங்களில் பொதுமக்கள் மௌனமாக இருப்பதன் காரணமாகத்தான் விபத்துக்கள் அதிகரிக்கின்றனவோ என்று எண்ணுகின்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

ஆக, இங்கு நாம் கூறுவது பொதுமக்கள் சட்டத்தைக் கையில் எடுக்கின்ற அளவுக்கு நிலைமையை மோசமாக்கி விடக்கூடாது என்பதுதான்.

இது ஒருபுறமிருக்க, இப்போது எங்கள் மாணவர்களின் கல்வி தொடர்பில் நாம் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஏனெனில் வடபுலத்தின் கல்வியை வீழ்த்துவதில் அதீத பிரயத்தனங்கள் நடந்தாகின்றன.

இந்தப் பின்னணியில் ஒரு சில ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வடபகுதியில் அதிதீவிரமாகச் செயற்படுவதைக் காண முடிகிறது.

குறிப்பாக, தென்பகுதியில் எதனையும் செய்ய முடியாத குறித்த ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வடபகுதியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி, தமிழ் மாணவர்களின் கல்வியைப் பாழாக்குவதில் மறைமுகமாகச் செயற்படுகின்றன.

எனவே இது விடயங்களில் எம்மிடம் தெளிவான சிந்தனை இருந்தாக வேண்டும்.

இங்குதான் தமிழ் மாணவர்கள் ஓர் அமைப்பு ரீதியாக இயங்குவதன் மூலம் எமது கல்விக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுக்க முடியும்.

ஆம், குறித்த பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாதவிடத்து அது தொடர்பான தகவலை மாணவர் அமைப்பு வெளியிட வேண்டும்.

அதேபோன்று மாணவர்களுக்கு அவசியமான பரீட்சை வினாத்தாள்கள் எவை என்பதை மாணவர் அமைப்பு தீர்மானிக்கலாம்.

தவிர, குறித்த மாணவர் அமைப்பு தென்பகுதி மாணவர்களுடனும் உயர்கல்விப் பீடங்களுடனும் தொடர்பாடலை மேற்கொண்டு தேவையான மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் ஆலோசனைகள், பாடத்திட்டங்கள் என்பவற்றைப் பெற்று சக மாணவர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளித்து ஒரு பரந்த கற்றல் நெறிமுறைக்கு வழிவகுக்கலாம் என்பதால், எமது மாணவர்கள் இணைந்து ஒரு பலமான மாணவர் அமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டும்.

# அரசியல் கட்சிகளின் அழுத்தங்களால் வருடத்திற்கு 900 கோடி இழப்பு

(கொழும்பு)

உமா ஓயா திட்டத்தை மக்களுக்கு வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணத்தினால் வருடத்திற்கு 900 கோடி ரூபா இழப்பு நாட்டுக்கு ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

சில அரசியல் கட்சிகளின் அழுத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு அழுத்தங்களின் காரணத்தினாலேயே நாட்டுக்கு இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த தாக்கங்களின் காரணமாக, நாட்டுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் 4,500 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் சம்பூர் மின் உற்பத்தி நிலையம் முக்கிய பங்கினை வகித்து வருவதாகவும் அதனை வழங்குவதிலும் நாட்டில் பல்வேறு குழப்பங்கள் நிலவி வருகிறது.

இதனால், சம்பூர் மின் உற்பத்தி நிலையம் வழங்கப்படாவிட்டால் இலங்கைக்கு வருடாந்தம் 3,200 கோடி ரூபா நட்டம் ஏற்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை மன்னாரில் ஆரம்பம்

(மன்னார்)

ஜனாதிபதியின் வழிகாட்டலில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் மன்னாரிற்கு ஸ்மார்ட் எதிர்காலம் நடமாடும் சேவை நேற்று மன்னார் நகரசபை மைதானத்தில் ஆரம்பமாகியது.

மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் குறித்த நடமாடும் சேவை இடம் பெற்று வருகின்றது.

குறித்த நடமாடும் சேவையில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளடங்களாக திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் என பல ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

குறித்த நடமாடும் சேவையில் 36 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளதுடன், பின் தங்கிய மாணவர்கள் மற்றும் உள்நாட்டு தொழில் முறைமையிலான வேலை வாய்ப்புகளும் குறித்த நட மாடும் சேவையூடாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தொழில்களை பதிவு செய்தல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெறுதல். குறித்த நடமாடும்சேவை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை ஆரம்பமான குறித்த நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை வரை இடம்பெறும்.

மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான உபகரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது. (நி-6)

# மனவளக்கலைப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மன வளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்ப பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் க.செல்வகுமார் வழங்குவார். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# போதைப்பொருட்களுடன் வெளிநாட்டுப் பெண்கள் கைது

(கொழும்பு)

2 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் இரு வெளிநாட்டுப் பெண்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கென்யா நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் துருக்கி இஸ்தான்புல் நகரத்திலிருந்து டர்கிஷ் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் நேற்றுக் காலை 6 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர்களிடமிருந்து 500 கிராம் நிறையுடைய 40 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் 2 கோடி ரூபா பெறுமதியானது என விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி-6)

# கட்டுமானப் பொருட்களுக்கு விரைவில் விலைச்சூத்திரம்

(கொழும்பு)

கட்டுமானப் பொருட்களுக்கான விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த வர்த்தக அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

கட்டுமானப் பொருட்கள் தன்னிச்சையான விலையில் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வால், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வந்த 2,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடு சென்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (நி-6)

# வயல்வேலையில் ஈடுபட்டவர் மயங்கி விழுந்து மரணம்

(மட்டக்களப்பு)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவெளி குளத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

மூதூர் - பாலத்தடிச் சேனை கிராமத்தில் வசித்துவரும் 3 பிள்ளைகளின் தந்தையான சூரிய மூர்த்தி சுதாகரன் (வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

பெரியவெளி குளத்து வயலில் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மதியமளவில் மயக்கமுற்று விழுந்ததாகவும் உடனடியாக மூதூர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

தற்போது நாட்டில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும், வெயிலில் நின்று வயல் வேலை செய்கின்றவர்கள் வெயில் உச்சமான நேரங்களில் வயல் வேலை செய்வதனை தவிர்த்துக் கொள்வதன் மூலம் தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். (நி-6)

# சண்டிலிப்பாய் நாகபூசணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்-சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசையை தொடர்ந்து நாக பூசணி அம்பாள் உள்வீதி வலம் வந்து முற்பகல் 11 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார்.

மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசையினை தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது என தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கொலைக்கு நீதிகோரி தரணிக்குள மக்கள் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

வவுனியாவில் உயிரிழந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று முன்தினம் தரணிக்குளம் கிராம மக்களினால் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 17 ஆம் திகதி தரணிக்குளம் கிராமத்தில் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் 17 வயதுடைய சிறுமியின் சடலம் மீட்கப்பட்டிருந்தத நிலையில், நேற்றுமுன்தினம் இறுதிக் கிரியைகள் இடம்பெற இருந்த வேளை சிறுமியின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்து சிறுமியின் வீட்டிற்கு முன்பாக கிராம மக்கள் மற்றும் உறவினர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

சிறுமியின் மரணத்திற்கு சிறிய தந்தையாரே காரணம் எனவும் தெரிவித்து சிறுமியின் வீட்டில் இருந்து பேரணியாக ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொலிஸ் நிலையத்தையும் முற்றுகையிட்டதுடன் வீதியை மறித்தும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதன் போது சிறுமியின் கொலைக்கு நீதி வேண்டும், பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வேண்டும், சதுமிதாவின் மரணத்திற்கு நீதி வேண்டும், போன்ற பதாதைகளை தாங்கியவாறும் கசிப்பு மற்றும் போதைவஸ்தை இல்லாமல் செய், நீதி வேண்டும் நீதி வேண்டும் மரணித்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் காரணமாக தாண்டிக்குளம், இரணை இலுப்பைக்குள வீதி போக்குவரத்தானது தடைப்பட்டமையால் அவ் வீதியின் ஊடாக பயணம் செய்யும் மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்ததையடுத்து சந்தேகத்தில் சிறுமியின் சிறியதந்தையினை ஈச்சங்குளம் பொலிஸாரால் ஏற்கனவே கைது செய்த நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களையும் கைது செய்வதாகவும் பொலிஸார் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

# நிலவிவரும் குருதித் தட்டுப்பாடு வவுனியாவில் இரத்ததானமுகாம்



(குருமன்காடு)

வவுனியா மருத்துவமனையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டையடுத்து குருதி கொடை வழங்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா, குருமன்காடு காளிகோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் நேற்முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா,மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கியில் குருதித்தட்டுப்பாடு காணப்படுவதாக மருத்துவமனையினர் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து குருமன்காடு காளிகோவில் வீதியில் அமைந்துள்ள தனியார் பல் கலைக்கழகம் ஒன்றின் ஏற்பாட்டில் குறித்த இரத்ததான நிகழ்வு இடம் பெற்றது.

இதில் இளைஞர், யுவதிகள், குருதிக்கொடையாளர்கள் என பலரும் தாமாகவே முன் வந்து இரத்ததானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் அன்னை பூபதிக்கு அஞ்சலி

(குருமன்காடு)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் தமது பிள்ளைகளுக்கு நீதி கேட்டு 2616 ஆவது நாளாக வவுனியா, கண்டி வீதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டப் பந்தலில் குறித்த அஞ்சலி நிகழ்வானது இடம்பெற்றிருந்தது.

இதன் போது அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு ஒளி தீபம் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3095

### குரு

வேலை செய்யிற இடத்தில எவ்ளோ பிரச்சினை இருந்தாலும்..



வீட்டோட நிலைமைய யோசிச்சு பாத்தா.. இதெல்லாம் ஒன்னுமில்லை சமாளிச்சிரலாம்னு தோனும்...

### மயூ

நீங்க ஏங்க நடந்து போறவங்களையும் சைக்கிள்ல போறவங்களையும் துரத்துறீங்க...



அவங்க இன்னும் கொஞ்சம் வேகமா போறதுக்கும்.. ஃபிட்டா இருக்கிறதுக்கும் தான்...

### குமார்

பொண்டாட்டி சண்டை போடனும்னு முடிவு பண்ணிட்டா.. பெரிய காரணம் எல்லாம் தேவையில்லை...



காபி டம்ளரை டம்முனு வேகமா வச்சிட்டாலே போதும்...

### நிதர்ஷன்

மகள்: எனக்கு கணக்கு பாடம் சொல்லித்தாப்பா..
அப்பா: தெரியாதே என் அப்பா அம்மா என்ன படிக்க வைக்கவில்லையே...



மகள்: உனக்கு மட்டும் எவ்வளவு நல்ல அம்மா, அப்பா...

### லக்ஷன்

வாழ்க்கை என்னை செருப்பால அடிச்சிருச்சேன்னு நண்பனை பார்க்க போனா...



வாழ்க்கை அவன ஒரு ஓரமா படுக்க போட்டு வாயில உலக்கைய விட்டு குத்திக்கிட்டு இருக்கு...

### நிவாஸ்

ஏறி மிதிச்சிட்டு போற இந்த உலகத்தில, நாமும் ஏறி மிதிச்சிட்டுதான் போகனும்னு அவசியமில்லை...



தாண்டியும் போய்யிடலாம்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பக்கத்தில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை...

குறிப்பிட்டுள்ளார்.

குறித்த காலப்பகுதியில் சுமார் 300க்கும் மேற்பட்ட விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7,10)

## வெளியில்...

இதனால் பொதுமக்கள் அனைவரும் இந்த வெப்பமான காலநிலையில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,10)

## உயர் பட்டப்...

பதி பேராசிரியர் செ. கண்ணதாசனின் பதவிக்காலம் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு நேற்று பிற்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பீடாதிபதி தெரிவுக்காக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், கணக்கியல்துறை சிரேஷ்ட பேராசிரியருமான தி.வேல்நம்பி, விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கு.வேலாயுதமூர்த்தி மற்றும் விலங்கியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் க.கஜபதி ஆகியோர் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

பீடாதிபதி தெரிவுக்கு ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்களின் சுய சமர்ப்பணம் இடம்பெற்றது.

இதன்போது இரண்டு பேராசிரியர்களே சுய சமர்ப்பணத்துக்கு வருகை தந்திருந்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாக்களிப்பின்போது சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் முதனிலை பெற்று உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்குப் பீடாதிபதியாகச் செயற்படுவார். (ம-7,10,33)

## பருத்தித்துறை...

இதனைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் ரி56 ரக மகசீன்கள் 37 மற்றும் ஏ.கே.எல்.எம்.ஜீ.மகசீன் ஒன்றினையும் மீட்டுள்ளனர்.

இவை யுத்த காலத்தில் புதைக்கப்பட்டவையாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,10,60)

## நடத்துநர்...

பெற்றது.

படுகாயமடைந்த சாரதி மற்றும் நடத்துநர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,10)

## தடையை...

வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறுதியான வாகன இறக்குமதியின்போது பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்பட்ட 3 வருடங்களை 7 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாக அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்தால், புதிய வாகனங்களை விட குறைந்த விலையில் வழங்க முடியும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ம-7,10)

## கடன்...

பாடுகள் சார்ந்த வர்த்தக மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள் திணைக்களத்தின் உதவி செயலாளராகவும் வில்லியம் ரூஸ் கடமையாற்றுகின்றார்.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடனும், ஏனைய தரப்பினருடனும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பில் இந்த சந்திப்பின்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

வாஷிங்டன் நகரில் இடம்பெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அரையாண்டு கூட்டத்தின் போதே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதனிடையே, OPEC நிதியத்தின் தலைவர் அப்துல் ஹமீட் அல் கலீஃபாவையும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சந்தித்துள்ளார்.

இலங்கையின் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை செயற்றிட்டங்களுக்காக நிதி வசதிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாக, அப்துல் ஹமீட் அல் கலீஃபா இதன்போது தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அரசாங்கத்தினால் பின்பற்றப்படும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவரமைப்பின் பிரதி நிர்வாகி அஞ்சலி கௌர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இடையிலான சந்திப்பும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## இன்று திறந்து...

திருமுருகன் அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தின் பிரபல சட்டவல்லுநர் எஸ். ஆர்.கனகநாயகம் அவர்களின் மகள் வைத்திய நிபுணர் பாலசுப்பிரமணியம் சாவித்திரி தம்பதிகள் இச் சிகிச்சை நிலையத்துக்கான இடத்தை சிவபூமி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

எமது மக்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய மகப்பேற்றின்மை என்ற குறைபாட்டை நிவர்த்திக்கும் பொருட்டு இச்சிகிச்சை நிலையம் கருவள சிகிச்சை நிலையமாக இயங்கவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று நிபுணர் ந.சரவணபவன், யாழ். மருத்துவ பீட விரிவுரையாளர் மகப்பேற்று வைத்திய நிபுணர் சி.ரகுராமன், யாழ். மருத்துவபீட விரிவுரையாளர் வைத்திய நிபுணர் பா.பாலகோபி ஆகியோரின் வழிகாட்டலில் இச் சிகிச்சை நிலையம் இயங்கவுள்ளது.

இதன்மூலம் எமது தமிழ்ச் சமூகம் மிகுந்த நன்மையைப் பெற முடியும்.

இலக்கம் 61, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இச் சிகிச்சை நிலையத்தை இன்று காலை 9.30 மணியளவில் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.ஆர்.கே. கனகீஸ்வரன் அவர்கள் திறந்து வைப்பார் என்றும் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (ந)

## வெங்காய இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து பெரிய வெங்காய இறக்குமதியை லங்கா சதோச நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரிய வெங்காயம் ஏற்றுமதிக்கான தடையை நீக்குவதற்கு தீர்மானித்த இந்திய அரசாங்கம், முதற்கட்டமாக இலங்கைக்கு 10,000 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த நாட்டில் மாதாந்தம் தேவைப்படுகின்ற பெரிய வெங்காயத்தின் தேவை சுமார் 20,000 மெற்றிக் தொன் என வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம-7,100)


மஹஜன சம்பத
திகதி 2024.04.20
சீட்டிழுப்பு இலக்கம் 5451
V 4 3 2 4 1 9
அத சம்பத
V 2 4 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0026
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1481
F 08 40 42 69 F
29169

மெகா பவர்
திகதி 20/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1799
K 05 06 18 22 48
28419

லக்கி 7 VIP
திகதி 2024.04.20
சீட்டிழுப்பு இலக்கம் 0277
V 1 6 5 2 0 7 V

கொவ்சத
சீட்டிழுப்பு இலக்கம் 3693
சீட்டிழுப்பு திகதி 20.04.2024
Y 39 58 66 75
Y 03858
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.20
சீட்டிழுப்பு இலக்கம் 0760
விருச்சிகம் 02 21 24 30 விருச்சிகம்
16422 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.04.2024 வெற்றி வாரம் 159 வர்ணம் நீலம்
Z 8 8 7 8 5 0
54927 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,804,732.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2425 வர்ணம் நீலம் 20.04.2024 சனிக்கிழமை
10 12 14 54 V
28181
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,176,850.40

சனிதா
2024.04.20 வெற்றி வாரம் 4586 வர்ணம் இளம் பச்சை
04 10 17 64 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,403,044.00
51402

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4137 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.04.20 தினம் சனிக்கிழமை
11 23 27 30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,444,235.60
790603

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 26 09 32 35 38
1601 சிவப்பு 20.04.2024 சனிக்கிழமை
799240
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 518,369,939.80

சனிக்கிழமை
வெற்றி வாரம் 2251
வர்ணம் மஞ்சல்
சீட்டிழுப்பு திகதி 2024.04.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 107,215,054.40
ADA KOTIPATHI
08 25 56 59 P
684107


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திட்ட அடிப்படையில் இலங்கைக்கு உதவப்படும்

## ஒபெக் நிதியம் தெரிவிப்பு

திட்ட அடிப்படையிலான நிதியுதவியின் ஊடாக இலங்கைக்கு உதவுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஒபெக் நிதியம் தெரிவித்துள்ளது.

தம்முடனான சந்திப்பின் போது, ஒபெக் நிதியத்தின் தலைவர் அப்துல்ஹமீட் அல்கலிபா இதனை அறிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு அவர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்த கால மாநாட்டுக்காக வொஷிங்டன் சென்றுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பாரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களையும் சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.(ம-7,10)

# மட்டக்களப்பில் இருவர் பலி

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பஸ்த்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாகவும், மற்றையவர் முதலைக் கடிக்கு இலக்காகி உயிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரது சடலங்களும் வாழைச்சேனைஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

(ம-7.10)


## விற்பனைக்கு

அரச அங்கீகார முத்திரையிடப்பட்ட நிறுவைத் தராசு வகைகள் 10Kg, 15Kg, 30Kg, 150Kg, 300Kg யாவும் ஒருவருட உத்தரவாதத்துடன் நிதான விலையில் விற்பனைக்குண்டு.

**நந்தலாலா இரும்பகம் யாழ்ப்பாணம்**

**021 222 6234**
**077 780 5950**

(524)

## விற்பனைக்கு

கோண்டாவில் டிப்போவிற்கு அருகாமையில் 1 3/4 பரப்பு வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**076 821 9414**

(0180)

## 2023 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு — ஆசிரியர் RS. சந்திரன்

காலம் ஏப்ரல் 22, 23 திங்கள், செவ்வாய்க்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள் :

- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

(501)

**றோயல் அக்கடமி**
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134 நிர்வாகம்

## பணியாளர் தேவை

சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

- Driver
- Security

வயதெல்லை 30 - 50
நேரில் வந்து தொடர்பு கொள்ளலாம்.

Happy Super Market - உரும்பிராய்
**077 945 5167**

(525)

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

**074 17 37 684**

(520)

## CANADA VISA

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம்.

(511)

021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குலம், விசாக நட்சத்திரம் 4 ஆம் பாதம், 33 வயதுடைய Switzerland இல் பிறந்த PR உள்ள அரச தொழில் புரியும் மணமகனுக்கு மெல்லிய அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றோம். 1994 ஆம் ஆண்டிலிருந்து 1999 இற்குள் பிறந்தவர்கள் விரும்பத்தக்கது.

(493)

**076 998 6437**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.03.2024 (சனிக்கிழமை) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் வேலுப்பிள்ளை கந்தையா சண்முகலிங்கம் (V.K சண்)**

(முன்னாள் யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர், ஸ்ரீலங்கா கிரிக்கெட்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் **20.04.2024** நேற்று (சனிக்கிழமை) கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் **22.04.2024** நாளை (திங்கட்கிழமை) **மு.ப 11.30** மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரை இழந்து நாம் தவித்து நின்றபோது எமக்கு ஆறுதல் தந்து சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்** (C-0177)

இல. 125, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் அருகாமையில் 8 3/4 பரப்பு காணி, சிறிய வீடு மின் இணைப்பு மற்றும் நான்கு பக்கமும் முட்கம்பி வேலி தென்னைகள் உள்ளடங்கியது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 220 3386**

(505)

## வேலையாட்கள் தேவை

- மரத்தளபாடங்களுக்கு வானிஸ் அடிக்கத் தெரிந்த ஒருவர் தேவை.
- AD licence உள்ள சாரதி (350 Canter) தேவை.
- இடம் யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :

**077 358 3879**

(C-0179)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0183)

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

(C-0183)

V2 GUEST 0743900360
0743900361

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 260/= | Max3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 188/= | |
| 1 Kg றவை | - 287/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 165/= | |
| 1 Kg அரிசி மா | - 200/= | |
| 1 Kg மல்லி | - 367/= | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 720/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~105/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 1 Lux றோஸ் சோப் | - 145/= | ~~175/=~~ |
| 450g Nestomalt | - 749/= | ~~780/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 180ml Sunsilk சம்போ மஞ்சள் | - 440/= | ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 54/= | ~~80/=~~ |

400g Anchor புதிய விலையில்



995/=
~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(525)

Happy Supermarket
**0777 8080 30**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.